ஆண்டு சந்தா ரூ. 60/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 6

இதழ் : 11

செப்டம்பர் – 2010



**அவர்** (இயேசு கிறிஸ்து)

ஐசுவரியமுள்ளவராயிருந்தும்,
நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே
ஐசுவரியவான்களாகும்படிக்கு,
உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.

2 கொரிந்தியர் 8:9

ஆசிரியர்

சகோ. வே. தேவதாஸ்



சுதேச ஊழியர் சாட்சி

# Rev.சுக்லால் டாமோர்

இராஜஸ்தான்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் சுக்லால் டாமோர், நான் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா என்ற மாவட்டத்தைச் சேர்ந்த காரியா என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு பீல் ஆதிவாசி. நான் ஒரு பாரம்பரிய கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவன். ஆனாலும் இயேசு கிறிஸ்துவைக் குறித்து அதிகமாய் அறியாமல், சாராயம் குடிப்பதும், சண்டை போடுவதும், பீடி, தம்பாக்கு போடுதல் போன்ற பாவங்களில் ஈடுபட்டு மிகவும் மோசமானவனாக வாழ்ந்து வந்தேன். 1983ம் ஆண்டு நான் ஒரு ஊழியர் மூலமாக இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் அதிகமாய் அறிந்து கொண்டேன். அதன்பின்பு அந்த ஊழியர் எனக்காக ஜெபிக்கவே, நான் பாவ உணர்வடைந்தேன். ஆனாலும் நான் சபை ஆராதனைக்குச் செல்லாமலேயே வாழ்ந்து வந்தேன். மீண்டும் ஒரு நாள் தேவன் என்னைத் சந்தித்தார், உடனடியாக நான் ஊழியத்திற்கு என்னை முழுமையாக அர்ப்பணித்து, வேதாகமக் கல்லூரியில் ஒரு வருடம் படித்து பின்பு ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். ஆனால் ஆவிக்குரிய வாழ்க்கையில் என்னால் வளர முடியவில்லை, என்னை வளர்த்துவிடவும் ஆளில்லை. ஆகவே நான் எந்த பாவங்களைச் செய்து வந்தேனோ அதே பாவங்கள் என்னை மீண்டும் பின் தொடர்ந்தது. இந்த சூழ்நிலையில்தான் 1994ம் ஆண்டு ஷாலோம் சுதேச ஊழியர் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார். அதன் பின் என்னுடைய பாவ வாழ்க்கை முற்றிலும் மாறியது. அதன்பின்பு தேவனுக்கென்று என்னை முழுமையாக அர்ப்பணித்து ஷாலோமில் இணைந்து எங்கள் பகுதியைச் சுற்றிலும் உள்ள கிராமங்களில் ஊழியம் செய்து வருகிறேன். தற்போது சுமார் 70 குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு விசுவாசத்தில் வளர்ந்து வருகிறார்கள். தற்போது B.T.S., (Bachlor of Theological Studies) முடித்து போதகராக பிரதிஷ்டை செய்யப்பட்டு ஊழியம் செய்து வருகின்றேன். தொடர்ந்து எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **இயேசு நம்மோடு சபை,** ஒசூர்.

# உங்கள் சகோதரனிடமிருந்து....



***கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!***

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பு வாழ்த்துக்கள்.

தேவகிருபையால் 8 மாதங்களை முடித்து, தேவன் செப்டம்பர் மாதத்தை காண செய்த கிருபைக்காக தேவனை துதிக்கிறேன். கடந்த ஆகஸ்ட மாதத்தில், ஊழியர் கூடுகை, மூப்பர்கள் கூடுகை, ஊழியக்காரிகள் ஜெபகூடுகை தலைவர்கள் கூடுகை அனைத்தையும் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்தார்.

குறிப்பாக, சத்திமங்கல வட்டாரத்தில் உள்ள சபைகள் இணைந்து ஆகஸ்ட் 13–15 நாட்களில் நடத்திய எழுப்புதல் பெருவிழாவில் நானும் என் மனைவி **வஹிதாவும்** தேவ செய்தியை பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை தந்தார். 14.08.10 சனிக்கிழமை காலை கூட்டத்தில் கலந்து கொண்ட போதகர்கள், சபைமூப்பர்களுக்கும் சபை வளர்ச்சி குறித்து பகிர்ந்து கொண்டு ஜெபித்தபோது பரிசுத்த ஆவியானவர் அபரிதமாக சபை எழுப்புதலுக்கான அபிஷேகத்தால் ஆசீர்வதித்தார். நம் ஷாலோம் பிரதிநிதியான சகோ. ஜெபசிங் சந்தோஷம் மிக நேர்த்தியாக ஒழுங்கு செய்திருந்தார்கள்.

நாங்கள் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் ஷாலோம் சபைகளை ஒருங்கிணைப்பு பணியில் (Church Net Work) துரிதமாக செயல்பட்டு வருகிறோம். மத்தியபிரதேசம் பணிகளை பொறுப்பேற்று நடத்த **சகோ. கார்த்திக்** மற்றும் அவருடைய மனைவி **சகோதரி ஏஞ்சல்** இருவரும் குடும்பமாக முன் வந்துள்ளார்கள். அதுபோல் ராஜஸ்தான் மாநில பொறுப்புகளை நிறைவேற்ற **சகோ. கேரட்** அவர்கள் குடும்பமாக முன் வந்துள்ளார்கள். அதுபோல் “SHALOM CHARITY MISSION” மூலமாக நடைபெறும் 10,000 ஆதிவாசி மாணவர்களுக்கான கல்விப்பணித் திட்டத்தை நிறைவேற்ற **சகோ. டேனியல் ஆஸ்வால்டு** அவர்கள் குடும்பமாக முன் வந்துள்ளார்கள். மேலும் பணித்தள பொறுப்புகளை ஏற்று நடத்துபவர்கள், முன்னேற்றப் பணி, தலைமை அலுவலக பொறுப்புகள் மற்றும் பொறுப்பாளர்களை குறித்து அடுத்த மலரில் விபரமாக எழுதுகிறேன். இவர்கள் அனைவரும் தேவன் நல்ல ஞானத்தையும், சுகத்தையும் தந்து நடத்த ஜெபிக்க அன்பாய் கேட்கிறேன்.

**ஷாலோம் அற்புதத்தின் நாள்**

செப்டம்பர் 24–ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று அனைத்து ஷாலோம் சபைகளிலும் ஷாலோம் அற்புதத்தின் ஜெப நாளாக ஆசரிக்க இருக்கிறோம். தேவன் தாமே அனைத்து சபைகளிலும் திரளான ஜனங்களை அழைத்து வரவும், சபை ஊழியர்களையும், மூப்பர்களையும் தேவன் வல்லமையாகப் பயன்படுத்தவும் அதிகமாக அற்புதங்கள் நடைபெறவும், நோய்கள், சாபம், பிசாசின் கட்டுகளிலிருந்து பீல் மக்கள் விடுவிக்கப்படவும், அநேக ஆயிரமாயிரம் பேர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும் பாரத்துடன் ஜெபியுங்கள்.

**ஷாலோம் மிஷன் ஞாயிறு**

வரும் அக்டோபர் 3,10,17 ஆகிய நாட்களில் **“ஷாலோம் மிஷன் ஞாயிறு”** கொண்டாடப்படுகிறது. இவ்வருடமும் ஒவ்வொரு விசுவாசியும் ஆயத்தமாகவும், ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்த தங்களை சாட்சியாக அர்ப்பணிக்கவும், உற்சாகமாக காணிக்கைகளை படைக்கவும் ஜெபியுங்கள்.

**புது ஊழியர்களுக்கான பயிற்சி**

கர்த்தருக்கு சித்தமானல் செப்டம்பர் மாதம் 20–22 வரை 50 புதிய ஊழியர்களுக்காகவும், குடும்பங்களை ஆயத்தமாக நடத்த உள்ளோம். பாவம், சாபம் இவர்களிலிருந்து விடுதலை பெற்று பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படவும், ஆத்தும பாரம் பெற்றுக் கொள்ள ஜெபியுங்கள். மேலும் அக்டோபர் மாதம் முழுவதும் நடைபெற உள்ள 1 மாத பயிற்சி ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

## 20ம் ஆண்டு நிறைவு தரிசனங்கள்

❄ ஒவ்வொரு சுதேச ஊழியரும் ஒரு புதிய ஊழியரை எழுப்ப வேண்டும்.

❄ ஒவ்வொரு திருச்சபையும் குறைந்தது இரண்டு கிளை சபைளை ஆரம்பிக்க வேண்டும்.

❄ ஒவ்வொரு பீல் ஆதிவாசி விசுவாசியும் 20ம் ஆண்டு முடிவதற்குள் 20 புதிய குடும்பங்களுக்கு இயேசுகிறிஸ்துவின் நற்ச்செய்தியை அறிவிக்க வேண்டும்.

❄ 1000 ஊழியர்கள், 1000 சபைகள் , 7000 மூப்பர்கள் மூலமாக பல்லாயிரம் குடும்பங்களை வழி நடத்த வேண்டும்.

❄ 10,000 ஆதிவாசி பிள்ளைகளை கல்விப்பணியில் தாங்கும் பணியில் இவ்வருடம் 1000 பிள்ளைகளை நாம் தாங்க வேண்டும். (இதுவரை 550 மாணவர்களைத் தாங்கி வருகிறோம்.)

**ஊழியத்திற்கான தேவைகள்**

நாங்கள் குடும்பமாக அநேக நாட்கள் பணித்தளத்தில் செயல்பட்டு, ஊழியப் பொறுப்பை நிறைவேற்றி வருகிறோம், ஆனால் பொறுப்புகள் அதிமாகவதை போல் தேவைகளும் கூடி வருகிறது. தலைமை அலுவலக பணிகள், முன்னேற்ற பணிகள் பத்திரிகை மற்றும் தொடர்புப் பணி ஊழியங்கள், பணித்தள அலுவலக ஊழியர்கள் தேவைகள், மேலும் ஊழியங்களை நிறைவேற்ற குறிப்பாக கூட்டங்கள், முகாம்கள், பயிற்சிகள் இவைகளை நடத்த தேவைகள் மிகவும் அதிகமாகிறது. மாதந்தோறும் ரூ.500 கொடுத்து ஜெபித்து தாங்கக்கூடிய ஷாலோம் ஊழியப் பங்காளர்கள் 1000 பேர் எழும்ப வேண்டும். தயவாக இதனை வாசிக்கும் நீங்கள் பங்காளாராக இணைய அன்புடன் கேட்கிறேன். உங்கள் குடும்ப அங்கத்தினர்கள், குறிப்பாக

உங்கள் பிள்ளைகள், உறவினர்கள், கிறிஸ்துவுக்கு அன்பான நண்பர்கள் குறைந்தது இரண்டு பேர்களை அறிமுகப்படுத்த அன்புடன் கேட்கிறேன். இம்மாத இறுதிக்குள் 5 சிறப்பு ***Pamphlets*** (ஊழியத்தை குறித்த விபரங்களை அனுப்புவோம். மேலும் நம் ஊழியத்தை குறித்த பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் எழுப்புதல் அறிமுகப்படுத்தப்படுகிறது தேவையானால் எழுதுங்கள். உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்

அதுபோல் நம் ஊழியத்தின் நிதி நிலைமையை மாதந்தோறும் இலகுவாக நடத்திச் செல்வதற்கு குறைந்தது **ரூ.10 இலட்சங்கள்** தேவைப்படுகிறது. ஒவ்வொரு நாளும் வருகிற காணிக்கை மூலமாக, மாத தேவைகளை சந்திப்பதில் தினமும் கஷ்டப்படுகிறோம். ஆகவே **ரூ.10 இலட்சங்கள்** வைப்பு நிதி தொகையாக இருக்குமானால் முதல் வாரத்தில் அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்து வருகிறோம். ஒவ்வொரு மாத காணிக்கையை சேர்த்து அந்தந்த மாதத்தில் கஷ்டப்படாமல் நடத்த முடியும்.

ஆகவே மிகுந்த ஜெபத்துடன் ரூ. 1000 ஒருமுறை செலுத்தி ஆயுட்கால அங்கத்தினருக்கான நிதி எழுப்பத் திட்டமிட்டுள்ளோம். முதற்கட்டமாக 1000 பேர்கள் இணைப்பதன் மூலமாக ரூ.10 இலட்சங்களாக எழும்ப திட்டமிட்டுள்ளோம். தயவாக நீங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவரையும் **“ஷாலோம் ஊழிய ஆயுள்கால அங்கத்தினர்களாக”** இணைக்கவும் தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளவும் ஷாலோம் ஊழியங்களை தாங்க அன்புடன் கேட்கிறோம். ஷாலோம் ஊழிய ஆயுள் கால அங்கத்தினர்களுக்காக நாங்கள் குடும்பமாக ஊழியங்களுக்காக ஜெபிக்கக் கடமைப்பட்டுள்ளோம். மேலும் **Membership Certificate** அழகான (அங்கத்தினருக்கான சான்றிதழ்) அனுப்பி வைக்கிறோம். இது குறித்து ஷாலோம் பிரதி நிதிகள், முன்னேற்றப் பணியாளர்கள், அலுவலக ஊழியர்கள் மற்றும் அனுப்பும் போது உங்கள் நல் ஆதரவு கொடுத்து உதவ கேட்கிறேன். உங்கள் யாவருக்காக நாங்களும், ஊழியர்கள் யாவரும் ஜெபித்து வருகிறோம்.

***“உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்...,***
***பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.” (ஆதி. 12:2,3)***

என்ற வசனங்களின்படி தேவன் தாமே உங்களையும், உங்கள் சபைகளையும் ஊழியங்களையும் நூறுமடங்காக ஆசீர்வதிப்பாராக.

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*



(Rt.Rev.Dr.V. தேவதாஸ்)

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

# நூறுமடங்கு ஆசீர்வாதம்

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**“கர்த்தர் (ஈசாக்கை) அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்” ஆதி 26 : 12**

நூறுமடங்கு ஆசீர்வாதம் என்ற வார்த்தையை யாராவது சொல்லி ஆசீர்வதித்தால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது. வேதத்தில் தேவன் நூறுமடங்கு ஆசீர்வாதத்தை தம் ஜனத்திற்கு கட்டளையிட்டுள்ளார். பிறந்த நாளையோ, திருமண நாளையோ நாம் காணும்போது நூறு ஆண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள். பிள்ளைகள் பள்ளியில், கல்லூரியில் படிக்கும் போது 100% வாங்கிவிட்டால் எத்தனை மகிழ்ச்சி. அதுபோல் வேதம் நமக்கு நூறுமடங்கு ஆசீர்வாதத்தை தேவன் எப்படி தருகிறார் என்பதை விளக்குகிறது.

**தேவனுக்கு கீழ்ப்படியும்போது வரும் நூறுமடங்கு ஆசீர்வாதம்.**

ஆதியாகமம் 26–ம் அதிகாரத்தை எடுத்து வாசியுங்கள். தேவன் ஈசாக்குக்கு தரிசனமாகி **“நீ எகிப்துக்கு போகாமல், நான் உனக்குச் சொல்லும் தேசத்தில் குடியிரு”.** (ஆதி 26 : 2 ) என்றார். தேவன் சொன்ன இடமும் அந்த ஜனங்களும் ஈசாக்குக்குப் பிடிக்கவில்லை. மிகவும் பயந்தான் (7–ம் வசனம்) ஆனாலும் தன் தகப்பன் ஆபிரகாமைப்போல் கீழ்ப்படிந்து, தேவனை விசுவாசித்து கேராரில் தங்கியிருந்தான். ஆகவே தேவனுக்குக் கீழ்ப்படிந்து, தேவன் தந்த தேசத்தில் அந்த வருடம் விதை விதைத்தான். நன்றாக வேலை செய்து உழைத்தான். தேவன் நூறுமடங்கு அந்த வருடத்தில் ஆசீர்வதித்தார். பெலிஸ்தர்கள் இவன்மேல் பொறாமை கொண்டார்கள். அபிமெலேக்கின் மனிதர் **நீ எங்களைப் பார்க்கிலும் மிகவும் பலத்தவனானாய்.... எங்களை விட்டு போய்விடு** என பல முறை அவனுடன் வாக்குவாதம் பண்ணினார்கள். ஆனாலும் இறுதியில் ஈசாக்குடன் உடன்படிக்கை செய்ய முன்வந்தார்கள். ஏனெனில் **நூறுமடங்கு ஆசீர்வாதம் தரும் கர்த்தரால் நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர்** என்று புறஜாதியார் அறிக்கையிட்டார்கள்.

அன்பானவர்களே, நாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவர் சொல்லுகிறபடி நாம் செய்யும்போது தேவன் நம்முடைய கையின் பிரயாசங்களை ஆசீர்வதிப்பார். ஒருவேளை ஆண்டவர் நம்மை நமக்குப் புரியாத இடத்தில் கொண்டுபோய் வைத்திருந்தாலும் நாம் கவலைப்படாமல் அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவர் சித்தத்தை நிறைவேற்ற ஒப்புக்கொடுத்தால் கட்டாயம் ஏற்ற காலத்தில் நம்மை ஈசாக்கைப் போல உயர்த்துவார். மட்டுமல்ல நமக்கு விரோதமாக பொறாமை கொண்டு அநேகர் அபிமெலேக்கைப் போல் எழும்பினாலும், எப்பொழுதும்

அவர்கள் உங்கள் முன் நிற்க முடியாது. நிச்சயமாக அவர்களை அபிமெலேக்கைப் போல் உங்களிடம் வந்து சமாதான உடன்படிக்கை செய்வார்கள். **“கர்த்தர் உங்களுடன் இருக்கிறார்”** என்று சாட்சி கூறுவார்கள். எனவே நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவர்

சித்தப்படி செய்து நம்முடைய உழைப்பின் மூலம் நூறுமடங்கு ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்வோம்.

***<u>தேவனுக்காக இழப்பதினால் கிடைக்கும் நூறுமடங்கு ஆசீர்வாதம்.</u>***

மாற்கு 10 : 29,30 வாசித்து பாருங்கள். பேதுரு இயேசுவை நோக்கி இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றினோமே என்று சொல்லத் தொடங்கியபோது **இயேசு பிரதியுத்தரமாக, என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மாற்கு 10 : 29,30)**

ஆண்டவராகிய இயேசு சொன்னார். என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தின் நிமித்தமாகவும் எதையாவது இழக்கிறவர்கள் அல்லது கொடுக்கிறவர்கள் இம்மையிலே துன்பங்களோடுகூட 100 மடங்காக தேவனிடத்தில் திரும்ப பெற்றுக்கொள்கிறார்கள். நாம் இயேசுவை மனதாரப் பின்பற்றி அவருக்காக, இயேசுவின் ஊழியர்களுக்காக, சுவிசேஷப் பணிக்காக கொடுப்பதை அவர் ஒருபோதும் மறப்பது கிடையாது. தேவனுக்காகவும், தேவாலயத்தின் கட்டுமானப்பணிக்காகவும் கொடுப்பவர்களுக்கு இம்மைக்குரிய ஆசீர்வாதம் மட்டுமல்ல, மறுமையிலும் நித்திய ஜீவனையும் தேவன் தருகிறார். பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் என்று இயேசு சொன்னார்.

ஊழியத்திற்கு வருவதற்கு முன்பு உலகப் பொருள் சம்பாதித்து பேர் புகழுடன் குடும்ப வாழ்க்கை நடத்தவேண்டும் என மனதில் ஆர்வம் கொண்டேன். 1981–ம் ஆண்டு தேவன் என்னை ஊழியத்திற்கு பேர்சொல்லி அழைத்தார். உலகத்தில் வாழ்ந்த நான் இயேசுவின் பின் சென்றேன். 1986–ம் ஆண்டு தேவன் இல்லற வாழ்வை தந்து 2 ஆண் பிள்ளைகளை (டைட்டஸ், ஷாலோம்) தந்தார். பல ஆண்டுகளாய் ஒரு பெண் குழந்தை வேண்டும் என வாஞ்சித்தோம். அழகான **“ஷாரோன்”** என்ற பெண் குழந்தையை 1991–ம் ஆண்டு ஜுன் 21–ம் தேதி தேவன் தந்தார். பிறந்த சில தினங்களில் சுகவீனப்பட்டு, மருத்துவ வசதிகள் கிடைக்காமற் போனபடியால் இறந்துவிட்டது. குஜராத் தாகோத் பணித்தளத்தில் அடக்கம் செய்தோம். எங்களுக்கு தமிழில் ஆறுதல் சொல்ல யாருமேயில்லை. என் மூத்த மகன் டாடி, “ஷாரோன் பாப்பா எங்கே” என்று ஏக்கத்துடன் கேட்டான். நான் அவளை இயேசப்பா கொடுத்தார் அவரே எடுத்துக்கொண்டார். என பதில் சொன்னேன். ஆண்டவரே உமக்காக 10 வருடங்கள் ஊழியம் செய்தோமே ஏன் இந்த இழப்பு என அங்கலாய்த்தோம்.

அடுத்த வருடம் (1992)–ம் ஆண்டு அதே நாளில் **சகோ. D.G..S. தினகரன்** அவர்களை சந்திக்க நேரிட்டது. அவர்கள் மனதுருக்கத்துடன் ஜெபித்தார்கள். அந்த பெண் குழந்தையை கட்டாயம் தாரும் என மன்றாடினார்கள். 1993–ம் ஆண்டு தேவன் மறுபடி **“ஷெக்கினா”** என்ற அன்பு மகளை தந்தார். அதுமட்டுமல்லாமல் ஒரு சிறு கோதுமை மணி பீல் மக்கள்

நிலத்தில் விழுந்தபடியால் ஆயிரமாயிரம் ஆத்துமாக்களைத் தருவேன் என ஆவியானவர் திருவுளம்பற்றினார். இன்று ஷெக்கினா என்ற மகளை மட்டுமல்ல 400 பீல் சுதேச ஊழியர்களுக்கும் எங்களை ஆவிக்குரிய தாய், தகப்பனான மாற்றி ஆயிரமாயிரமான ஆவிக்குரிய பிள்ளைகளைத் தந்துள்ளார். இயேசுவுக்காக, சுவிசேஷத்திற்காக நாம் இழப்பவைகளை தேவன் 100 மடங்காக கட்டாயம் தந்தருள்வார்.

***வேத வசனத்தை விதைப்பதால் வரும் நூறுமடங்கு ஆசீர்வாதங்கள்.***

**கேளுங்கள் விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்... ஒருசில விதை நல்ல நிலத்தில் விழுந்து ஓங்கி வளருகிற பயிராகி ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன் தந்தது. (மாற்கு 4 : 1–8)**

நாம் மேற்கண்ட இரண்டு வகையான நூறுமடங்கு ஆசீர்வாதங்களும் இம்மைக்குரிய ஆசீர்வாதங்களாகும். ஆனாலும் இயேசுகிறிஸ்து சொன்ன விதைக்கிறவன் உவமையில் 100 மடங்கு அழியாத ஆசீர்வாதத்தைப் பற்றிக் கூறினார். விதை என்பது தேவனுடைய வசனம். அதற்கு கிடைக்கும் பலன் நூற்றுக்கணக்கான ஆத்துமாக்கள். விதைக்கிறவன் என்றவுடன் ஊழிய அழைப்பு பெற்றவர்கள் தான் வசனத்தை விதைக்க வேண்டும். பிரசங்கிக்க வேண்டும் என நினைக்கக்கூடாது. வசன விதைகளை தேவன் நம் கையில் தந்துள்ளார். நாம் அனைவருமே விதைக்க வேண்டும். ஒரு மனிதனின் உள்ளத்தில் வேத வசனத்தை கூறும்போது அவன் ஆத்துமா இரட்சிக்கப்படும். வசனத்தை விதைப்பதினால் கிடைக்கும் ஆத்துமாக்களை இம்மையில் மட்டுமல்ல, மறுமையிலும் நித்திய ஜீவனை பெற்றுக்கொண்டவர்கள் பரலோக இராஜ்யத்தில் காணலாம். வேறு எதையுமே உலகில் இருந்து கொண்டுபோக முடியாது. வேதம் சொல்லுகிறது **ஆத்துமாக்களை ஆதாயம் செய்பவர்கள் ஞானவான்கள் ஆவர்.** இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் மிகப்பெரிய ஊழியர்கள், சுவிசேஷகர்கள், போதகர்களை கர்த்தருக்குள் வழிநடத்தியது ஊழியர்கள் அல்ல. சாதாரண விசுவாசிகள், மற்றும் தேவ பிள்ளைகள் மூலமாக விதைத்த விதைதான். 1979–ம் ஆண்டு பாவத்தில் சமாதானமற்றவனாக நான் வாழ்ந்தபோது ஒரு வயதான தாயார் தேவ வசனத்தின் மூலம் ஆண்டவரைப்பற்றி எனக்கு எடுத்துரைத்து ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அன்றைய தினம் ரட்சிப்பும், ஊழிய அழைப்பையும் பெற்றேன். அன்று அந்தத் தாயார் போட்ட விதை (வசனம்) இன்று ஆயிரமாயிரமாய் பலன் தருகிறது.

பிரியமானவர்களே, கர்த்தருடைய அன்பை நீங்கள் ருசிபார்த்தது உண்மையானால் இவ்வுலகில் வாழும் நாட்களில் தேவனுடைய வசனமாகிய விதையை மனித உள்ளங்களில் விதைக்கும் பணியைச் செய்யுங்கள். விதைப்பது உங்கள் பணி. விளையச் செய்வது தேவனின் பணி. நூறுமடங்காக ஆயிரமாயிரம் ஆத்துமாக்களாக அது பலன் தரும்போது எத்தனை மகிழ்ச்சி, மனந்திரும்பும் ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த மகிழ்ச்சியாமே! பரலோகத்தை நீங்கள் மகிழ்ச்சியாக்கும்போது பரலோக தேவன் இயேசு உங்களை நூறுமடங்கு இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிப்பார். இன்றே தேவ வசனமாகிய விதையை எடுத்துச் செல்லுங்கள். உங்கள் அருகில் ஒருவர் காத்துக்கொண்டிருக்கிறார்.

## கொடுப்பதினால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்.

நம் ஷாலோம் ஊழியம் இன்றைக்கு வளர்ந்துகொண்டிருப்பதற்கு இந்த பீல் மக்கள் கொடுப்பதும் ஒரு காரணமாகும். எல்லா வருடமும் நாங்கள் ஷாலோம் மிஷன் ஞாயிறு ஆசரிப்போம். ஒவ்வொரு ஆண்டும் இந்த ஜனங்கள் தங்கள் கஷ்டத்திலிருந்தும் மக்காச்சோளத்தை விற்று ஊழியத்திற்காக காணிக்கை கொடுப்பார்கள். அதேபோல இந்த ஆண்டும் அவர்கள் ரூ. 5,10,000 காணிக்கை செலுத்தியுள்ளார்கள். ஆகவே இந்த பீல் குடும்பங்களை கர்த்தர் நூறு மடங்கு ஆசீர்வதித்து வருகிறார். ஒருசில மாதத்திற்கு முன்பாக குஜராத் மாநிலம் பாரேவா கிராமத்தை சேர்ந்த ஒரு பீல் விசுவாசி சகோ. ரத்தன்பாய் என்ற சகோதரர் தன் வீடு பிரதிஷ்டைக்கு என்னை அழைத்திருந்தார். நானும் சென்றிருந்தேன். அவர் சொன்ன சாட்சி என்னை ஆச்சரியப்பட வைத்தது. பிச்சைக்காரனைப்போல அலைந்து கொண்டிருந்த அவரை இயேசு இரட்சித்தார். தன்னுடைய கஷ்டத்தின் மத்தியில் தேவனுக்காக கொடுக்க ஆரம்பித்தார். அவரை கர்த்தரும் ஆசீர்வதிக்க ஆரம்பித்தார். இன்றைக்கு ஒரு பெரிய வீடு கட்டி அநேகருக்கு ஆசீர்வாதமாக தேவன் வைத்திருக்கிறார். யாக்கோபு கர்த்தருக்காக கொடுக்க தீர்மானித்தபடியால் தேவன் அவரை ஆசீர்வதித்தார். நாமும் கொடுப்போம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம். கர்த்தருக்காக கொடுக்கிறவர்கள் ஒருபோதும் தரித்திரராகிறதில்லை.

என்றைக்கு நாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவருடைய பிள்ளைகள் என்ற அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டோமோ அன்றிலிருந்து நாம் சாதாரணமானவர்கள் அல்ல. இயேசவின் சொந்த பிள்ளைகளும், அவருடைய சுதந்திரருமாயிருக்கின்றோம். வானம் எனக்கு சிங்காசனம் பூமி எனக்குப் பாதப்படி என்று கூறிய இயேசு கிறிஸ்து அப்பாவின் பிள்ளைகள் நாம். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாக உரைத்த இயேசு கிறிஸ்துவின் சொந்த பிள்ளைகள் நாம். ஆகையால் நாம் அவருக்குள் ஐசுவரியவான்களே. நமக்கு இம்மையிலும் மறுமையிலும் எந்த குறைவும் இருப்பதில்லை. ஏனெனில் நாம் பரலோக ராஜாவின் பிள்ளைகள். நாம் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இதை என்றும் மறவாதீர்கள். இந்த ஐசுவரியத்தையும் கனத்தையும் இயேசு நமக்கு எப்படி சம்பாதித்துத் தந்தார் என்றால் சிலுவையின் மரணத்தாலேயே. சிலுவையில் அவர் கோர வேதனையுடன் தொங்கிக் கொண்டிருக்கும்போது அவரது உடலில் தரித்திரரின் உடைதான் இருந்தது. அவர் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த பொழுதும் கந்தைத் துணிகளில்தான் கிடத்தப்பட்டிருந்தார். அவர் நமக்காக தரித்திரரானதினால் இன்று அவருடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய ஐசுவரியத்தின் பங்காளிகளாகும் உரிமை பெற்றுள்ளோம்.

கடைசி மூச்சுவரைக்கும் இயேசுவுக்காக வாழ்வது நம்மேல் விழுந்த கடமையன்றோ? இயேசுவின் சுவிஷேசத்திற்காக நாம் தரித்திரரானால் தெய்வ ராஜ்ஜியத்தில் அவரது வலது பரிசத்தில் அமரும் பாக்கியம் பெறுவோம். இந்த சத்தியத்தை என்றும் மறவாமல் இயசேவுக்காக எதையும் இழக்க முன் வருவோம். நூறு மடங்கான நன்மைகளை இம்மையிலும், மறுமையிலும் பெற்று மகிழ்வோமாக!

**"கண்ணீரோடே விதைக்கிறவன் கெம்பீரத்தோடே அறுப்பான்" (சங் 126 : 4)**

# மிஷனெரிகளை அனுப்புவதென்றால் என்ன?

சிறப்புச் செய்தி : ***Bro. R.* ஸ்டான்லி,** நிறுவனர், ஆசீர்வாத இளைஞர் இயக்கம்.

மிஷனெரிப்பணியில் எங்கும் காணப்படும் ஆர்வம் இறுதிக்காலத்தின் நிச்சயமானதோர் அடையாளம். அகிலவுலகை நற்செய்திமயமாக்கும் திருப்பணியில் தீவிர ஈடுபாடு கொள்ளப் பரிசுத்த ஆவியானவர் திருச்சபைகளைத் தட்டி எழுப்பிக் கொண்டிருக்கிறார். மக்கள் தொகையில் இரண்டாம் இடத்திலுள்ள இந்தியாவில் இருபதாம் நூற்றாண்டின் இறுதியான இருபது முப்பது ஆண்டுகளில், உள்நாட்டு மிஷனெரி இயக்கங்கள் பல எழும்பியுள்ளன. புராதனச் சபைகளிலும், புதிய சபைகளிலும் கிறிஸ்தவர்கள் சந்திக்கப்படாதோரைச் சந்திப்பதில் பெருமளவில் உற்சாகங்காட்டி வருகின்றனர். மிஷனெரிகளை அனுப்பும் ஆராதனைகள் பெருகிவிட்டன. ஆயினும் மிஷனெரிகளை அனுப்புவதில் என்னதெல்லாம் உங்ளடங்கியுள்ளதென்பது முழுமையாய் அறியப்படாதது வருந்துதற்குறியது. மிஷனெரிகளை அனுப்புவோரி பல்வேறு பொறுப்புகளைப் போதிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

மிஷனெரியின் பணியை ஒரு நாடகத்திற்கு ஒப்பிட்டால் அதில் குறைந்தது ஐவகை நடிகர் குழுக்கள் உண்டு. அவர்கள் மிஷனெரி பவுல் ரோமர் 10:12–15–இல் நமக்கு வரிசைப்படுத்தி அறிமுகம் செய்கிறார். அவர்கள் அனுப்புவோர், பிரசிங்கிப்போர், கேட்போர், விசுவாசிப்போர், மற்றும் ஆராதிப்போர் ஆவர். காட்சியில் முதலாவது தோன்றவதே அனுப்புவோர் தான் என்பது வெளிப்படை. அன்னார் செயல்படத் துவங்கும் வரை நாடகம் ஆரம்பமாகாது! ஆம், மிஷனெரிகளை அனுப்புவதே மிஷனெரிப்பணியின் அடித்தளச் செயல். அனுப்புவதில் குறைந்தது ஐந்து பொறுப்புகள் உண்டு.

**1. மிஷனெரிப்பணிக்காய் ஜெபித்தல்**

“ஆகையால் புறப்பட்டுப் போங்கள்” என்ற இயேசுவின் கூற்றிற்கு “ஆகையால் வேண்டிக்கொள்ளுஙக்ள்” என்பது முந்தி வந்துவிட்டது! (மத். 9:37,38; 28:18–20) பன்னிரு சீடரைத் தெரிந்தெடுத்து அனுப்பும் முன்னர் இயேசு ஜெப அழைப்பு ஒன்று விடுத்தார் (10:1) ஜெபத்தில் முளைத்து ஜெபத்தில் முழுகாத மிஷனெரிப் பணி கடவுளின் நோக்கங்களை முன் தள்ளாது. என்றுமே வேலையாட்களை விட வேலை மிகமிக அதிகம். அறுவடைக்குப் போதுமான அறுவடையாளர்கள் இருந்தனரென்று சபைச் சரித்திரத்தில் ஒரு நாளும் இருந்ததில்லை (9:37). முடிவுவரை அப்படியேதான் இருக்கும். இங்குதான் கடவுளின் சர்வசக்தி இன்றியமையாததாகிறது. நாம் ஜெபிக்கும் அளவுக்குத்தான், அதாவது எவ்வளவாய் அவரை நோக்கி நாம் அங்கலாய்க்கிறோம் என்பதைப் பொறுத்துதான் அது வெளிப்படும். அதிக ஜெபமென்றால் அதிக வல்லமை, குறைந்த ஜெபமென்றால் குறைந்த வல்லமை, ஜெபமில்லையென்றால் வல்லமையில்லை.

வேறெந்த காரியத்திற்கும் மேலாக ஜெபத்தை வைத்ததாலேயே அப்போஸ்தலன் புவல் மிஷனெரிப் பணியில் அமோக வெற்றி கண்டான். அவன் எல்லா மனிதருக்காவும் ஜெபங்களையும் துதிகளையும் “முதலாவது” ஏறெடுக்கவேண்டுமென்று தேவ மக்களுக்கு அறிவுறுத்தினான். (1தீமோ. 2:1).

ஜெபப் பலிபீடத்திற்குப் போதிய விறகு இல்லாததினால்தான் கிறிஸ்தவர்கள் மிஷனெரி ஜெபத்தில் அனல் குன்றிப் போகிறார்கள். அவ்வப்போது மிஷனெரி நிறுவனங்கள் அறிவிக்கும் சிறப்புத் தேவைகள் தவிர்த்து, மிஷனெரிப் பணிக்காய் ஜெபிக்கும் போதெல்லாம் மனதில் வைக்க வேண்டிய குறிப்புகள் சில உண்டு.

நற்செய்தியை அறிவிக்கப் புறப்பட்டுபோனவர்களின் தைரியத்திற்காய் ஜெபியுங்கள். துணிச்சல் நிறைந்த பவுலைப் போன்றதோர் அப்போஸ்தலன் கூட தனது தைரியத்திற்காய் ஜெபிக்கும்படி விசுவாசிகளிடம் கெஞ்சினான். "நான் பேசும்போது நற்செய்தியின் மறைபொருளைத் துணிவுடன் தெரியப்படுத்துவதற்கான வார்த்தைகளைக் கடவுள் எனக்குத் தந்தருளுமாறு எனக்காக மன்றாடுங்கள்". (எபே. 6:19,20).

நற்செய்தியைக் கேட்போரின் இருதயங்களைக் கர்த்தர் திறக்குமாறு ஜெபியுங்கள். வெளிப்பிரசங்கம் ஒன்றைக் கேட்கவும் அதை விசுவாசிக்கவும் லீதியாளின் இருதயத்தைத் திறந்தது கர்த்தரே (அப். 16:14) நற்செய்தியின் மாட்சிமையான ஒளியைக் காணமுடியாதவாறு சாத்தான் மக்களுடைய மனதைக் குருடாக்கியிருக்கிறான். இந்த இருளை அகற்றி அவர்கள் மீது ஒளியைக் கடவுள் மட்டுமே வீசச் செய்யமுடியும் (2கொரி. 4:3–6).

எதிர்க்கிறவர்களுக்காய் ஜெபியுங்கள். மனிதனுக்கும் மகிபனுக்கும் எதிராளியானவன் கையில் சிக்கிக் கொண்டு பயன்படுத்தப்படும் பாத்திரங்கள்தான் அவர்கள். துன்புறுத்தல் அதிகரிக்கும் போது அசாதாரண அற்புத அடையாளங்களை நிகழ்த்துவது தேவனுக்கு வாடிக்கை. அவரது தெய்வீக வல்லமை எதிர் பேசுவோரின் நாவை அடக்கிவிடும் (அப். 4:16,29,30).

புதிய விசுவாசிகளுக்காய் ஜெபியுங்கள். நமது மிஷனெரிக் கனிகளுக்காய் இயேசு ஏற்கெனவே ஜெபித்துள்ளாரேன அறிவது அத்தனை ஊக்கம்! தமது பிரதான ஆசாரியத்துவ ஜெபத்தில், "பிதாவே, நான் இவர்களுக்காக மட்டும் வேண்டவில்லை; இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கப்போகிறவர்களுக்காகவும் வேண்டுகிறேன்" என்றார் (யோவான் 17:20).

மிஷனெரிகளின் நலனுக்காய் ஜெபியுங்கள். அவர்கள் மனதில் தெளிவாகவும், உடலில் ஆரோக்கியமாகவும், ஆன்மீகத்தில் உறுதியாகவும், பொருளாதாரத்தில் நிலையாகவும், சமுதாயத்தில் நட்புடனும் இருக்க வேண்டும். வருமுன் காப்பதே மேல். பரிசுத்தக் குலைவு, வியாதி, சோர்பு, பிரிவினை மற்றும் அபாயங்களிலிருந்து மிஷனெரிகள் காக்கப்பட ஜெபியுங்கள்.

அகத்தூண்டுதலின்படி ஜெபியுங்கள். திடீரெனப் பரிசுத்த ஆவியானவர் ஒரு குறிப்பிட்ட பணிக்களம் அல்லது பணியாளரை நினைவுபடுத்தி ஜெபிக்கப் பாரப்படுத்துவார். அங்கு அல்லது அவருக்கு ஏதோவொரு பிரச்சனை இருக்கலாம். இவ்வித சாட்சிகள் ஏராளம்.

அறிவிக்கப்பட்டபடி ஜெபியுங்கள். மிஷனெரி இயக்கங்களின் பத்திரிக்கைகள், சுற்றுக்கடிதங்கள் மற்றும் பொதுவான செய்தித்தாள்களிலிருந்து நமக்குப் போதுமான ஜெபக்குறிப்புகள் கிடைக்கும். **Patrick Johnstone** என்பவர் தொகுத்த **Operation Word** எனும் நூலைத் தினமும் பயன்படுத்தினால் உலகிலுள்ள அத்தனை நாடுகளுக்காகவும் ஜெபித்துவிடலாம்.

கற்பனைசெய்து ஜெபியுங்கள். முன்னணி மிஷனெரி பணியைக் குறித்து எத்தனையோ பிரச்சனைகள், சவால்கள் மற்றும் தேவைகளை நாம் கற்பனை செய்து பார்க்கலாம். கற்பனைகளைப் பிரார்த்தனைகளாக்குவோம்.

**2. மிஷனெரிப் பணிக்குக் கொடுத்தல்:**

கிறிஸ்தவப் பணியைச் சபை நிறுவுதல், சபை வளர்த்தல் என இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். பவுல் நடுவான்; அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சுவான் (1 கொரி. 3:56). இயேசு பயன்படுத்திய ஒப்புமைகளின்படிச் சொன்னால், சபை நிறுவுபவர்கள் மீனவர்; சபையை வளர்ப்பவர்கள் மேய்ப்பர். எபேசியர் 4:13இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ள திருச்சபையின் ஐந்து பிரதான திருப்பணியாளரில், அப்போஸ்தலரும் சுவிசேஷகரும் முக்கியமாகச் சபை நிறுவுபவர்கள்; தீர்க்கதரிசிகளும், மேய்ப்பரும், போதகருமே சிறப்பாகச் சபை வளர்ப்பவர்கள். வேறுவிதமாய்ச் சொன்னால், முதற்குழுவினர் கல் உடைப்பவர்கள்; அடுத்த குழுவினர் கல்லில் செதுக்கும் சிற்பிகள். ஒன்று அடுத்ததற்கு வழி நடத்தும். அவை தனிப்பட்டவையல்ல, ஒன்றையொன்று சார்ந்தவை. உயிர்த்தெழுந்த கர்த்தரால் வல்லமை பெற்றுள்ள இவ்வூழியர் ஒருவருக்கொருவர் உதவுபவர்கள் (1கொரி. 3:5,6).

கிறிஸ்தவ ஊழிய உலகில் சபை சாரா ஊழியங்களென எதுவுமே கிடையாது. வெளியே பரிசுத்தவான்களோ, உள்ளே பாவிகளோ இல்லாத குழுதான் சபை என்பதால் தேவ மக்கள் எந்தப் பெயரில் ஊழியம் செய்தாலும் அது முழுக்க முழுக்க சபை ஊழியமே. அவற்றில் சில உள்ளூர் ஊழியங்கள்; மற்றவை பலவூர் ஊழியங்கள். கிறிஸ்துவின் உடலாகிய சபைக்கு உள்ளூரிலும், அதே வேளையில் பரந்த உலகிலும் செயல்பாட்டு வெளிப்பாடு உண்டு. இந்த அறிவுதான் சந்தேகக் கண்ணோட்டங்களை ஒழித்து, பல்வகை ஊழியங்களுக்கிடையில் கனிநிறை உறவுகளை வளர்க்கும்.

கர்த்தருக்கென்று நீங்கள் எடுத்து வைக்கும் பணத்தை மேலே விளக்கியுள்ள இருவகை ஊழியங்களுக்கும் பிரித்துக் கொடுங்கள். அப்பொழுது சந்திக்கப்படாதோரைச் சந்திப்பதிலும், சந்திக்கப்பட்டோரை வளர்ப்பதிலும் உங்களுக்குப் பங்கிருக்கும். மிஷனெரி ஊழியத்திற்குக் கொடுப்பது கிரமமாகவும் தியாகமாகவும் இருக்க வேண்டும்.

**அ). கிரமமாய்க் கொடுங்கள்:**

மஷனெரி நிறுவனங்களுக்கு மாதந்தோறும் கட்டாயச் செலவுகள் உண்டு. அவற்றில் சில மிஷனெரிகளுக்குச் சம்பளம், மிஷனெரிக் குழந்தைகளுக்குக் கல்விச் செலவு, வீட்டு வாடகை, கட்டிடம் மற்றும் வாகனப் பராமரிப்பு ஊழியச் செலவுகள், பயணச் செலவுகள் .... எனக்குத் தோன்றும்போதெல்லாம் அல்லது முடியும் போதெல்லாம் கொடுப்பேன் என்று சொல்லாதீர்கள். உங்களை வேலைக்கு அமர்த்துபவர் இப்படிச் சொன்னால் நீங்கள் அந்த வேளையில் சேருவீர்களா? மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை வாக்களியுங்கள். அப்பொழுதுதான் வருடாந்திரத் திட்டமிடு கூடுகைகளில் சரியான தீர்மானங்கள் எடுக்க மிஷனெரித் தலைவர்களுக்கு எளிதாயிருக்கும்.

உங்கள் விருப்பத்திற்கும், வசதிக்கும் ஏற்றவாறு தெரிந்தெடுக்க மிஷனெரி இயக்கங்களில் பலவிதத் திட்டங்கள் உண்டு. பகுதியாக அல்லது முழுமையாக ஒரு மிஷனெரிச் சம்பளத்தை நீங்கள் கொடுத்துவிடலாம். ஒரு பணிக்களத்தைப் பொறுப்பெடுத்து அதற்கு ஆகும் செலவுகளைச் செலுத்தலாம். ஓர் ஆலயம் அல்லது மிஷனெரிகளுக்கான வீடு கட்ட மொத்த தொகையளிக்கலாம். இருசக்கர அல்லது நாலுசக்கர வாகனங்கள் வாங்க உதவலாம். அல்லது ஓரிரு இலட்ச ரூபாய்கள் வைப்புநிதியில் வைக்க மிஷனெரி இயக்கங்களுக்குக் கொடுத்து அதிலிருந்து வரும் வட்டியில் ஒரு மிஷனெரிக்குச் சம்பளம் கொடுக்கச் சொல்லலாம். தொழிற்கல்லூரிகளில் நமது பிள்ளைகளுக்கு இடம் கிடைக்க எத்தனை இலட்சங்களை அள்ளி வீசுகிறோம்.

ஆ). தியாகத்துடன் கொடுங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையில் வளருவதே கிறிஸ்தவ வளர்ச்சியாகும் கொடுப்பது ஒரு கிருபையே. "நீங்கள் எல்லாவற்றிலும் பெருகியிருப்பதுபோல இந்தக் கிருபையிலும் பெருக வேண்டும்" என அப்போஸ்தலன் பவுல் கொரிந்து கிறிஸ்தவரை ஊக்குவித்தான் (2கொரி. 8:7). இவ்வசனத்தின் சூழமைவு கிறிஸ்தவ ஈகையாகும். நம்மைப் பாதிக்கும் வரை நாம் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். பத்திலொன்று கொடுக்கும் பழைய ஏற்பாட்டுப் பாரம்பரியம் மிகக் குறைவான அளவே. அதில் துவங்கலாம், தங்கிவிடக் கூடாது.

நியாயமானதொரு அனுபோகத்தைத் துறந்து அதற்காக ஆகக்கூடும் செலவை மிஷனெரிப் பணிக்குக் கொடுத்துவிடும் போது உண்டாகும் மகிழ்ச்சிதான் என்னே கல்வாரித் தியாகத்திற்கு முன் எதுவும் நிற்க முடியுமோ? தியாகக் காணிக்கை கர்த்தருக்கு முன் சுகந்த வாசனையாய் எழும்பிச் செல்லும். இறைமக்கள் இறைப்பணிக்குத் தசமபாகத்திற்குக் கூடுதலாய்க் கொடுக்காவிடில் உலகம் ஒருபோதும் நற்செய்திமயமாகாது. மரியாள் பரிமள தைலத்தை இயேசுவின் மீது ஊற்றியபோது அந்த வீடு முழுவதும் வாசனையால் நிரம்பிற்று. இத்தியாகச் செயல் இயேசுவுக்கு உடனே அகிலவுலக நற்செய்திப் பணியெனும் கற்பனைத் தோயிற்று (மாற்கு 14:9). கிறிஸ்துவின் சுவிசேஷம் சரித்திரத்தில் நிகரற்ற தியாகக் கதை. தியாக உணர்வின்றி அதைப் பறைசாற்றுவது சாத்தியமோ?

சென்ற ஆண்டைவிட மிஷனெரிப்பணிக்கு இவ்வாண்டு நீங்கள் கூடுதல் கொடுக்காவிடில், மிஷனெரிகளுக்குச் சம்பள உயர்வு வேண்டாம் அல்லது அவர்கள் ஊழியத்தை விரிவாக்க வேண்டாம் என்று சொல்லுகிறீர்கள் என்பதே பொருள். சிந்திப்பீர்!

## 3. மிஷனெரிகளுக்குப் புத்துணர்வூட்டுதல்:

மிஷனெரிகள் தேவ தூதரல்ல. அவர்கள் அபூர்வப் பிறவிகளுமல்ல. அசாதாரண லேலைக்கு அழைக்கப்பட்ட சாதாரண மக்கள் அவர்கள். கிறிஸ்தவ ஊழியரில் அறிவும் திறமையும் படைத்தவர்கள் கன்னிக் களங்களுக்கு மிஷனெரிப்பணி செய்யச் செல்லாது கிறிஸ்தவர்கள் நடுவிலேயே ஊழியம் செய்யத் தங்கிவிடுகின்றனர், என்பது எவரும் அறிந்தது. மிஷனெரிப் பணியென்பது போர்க்களத்தின் முன்வரிசையாகும். எனவே மிஷனெரிகளுக்குத் தனிக் கவனிப்பும், பராமரிப்பும் தேவை. அவர்களினல் பெரும்பாலானோர் எதிர்ப்பு நிறைந்த சுற்றத்திலேயே வாழுகின்றனர். உற்றார் உறவினரை விட்டு முற்றிலும் மாறுபட்ட கலாச்சாரத்தில் வாழ்க்கை நடத்துகின்றனர். தனது உடன் ஊழியன் தவிர்த்து, தனது தாய் மொழியில் மிஷனெரி யாரோடுதான் பேசமுடியும்? எவ்வளவு கடினம்! "நான் அந்நியனும் பரதேசியுமாய் இருக்கிறேன்" என்று கீரியாத் அர்பாவில் சொன்ன ஆபிரகாமைப் போல மிஷனெரிகள் உணருகின்றனர். (ஆதி.23:4)

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படித் தாம் அனுப்பிய சீடர்கள் பல்வேறு இன்னல்கள், இறுக்கங்கள் மற்றும் இறைப்புகளுக்கு ஆளாவார்களென்று இயேசு நன்கறிந்திருந்தார். எனவேதான் அவர்களுக்குக் கொடுத்த பணிப்புரையின் இறுதியில் "உங்களை ஏற்றுக்கொள்பவர் என்னை ஏற்றுக் கொள்கிறார்... ஒருவருக்கு அவர் என் சீடர் என்பதால் ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம் கைம்மாறு பெறாமல் போகார்" என உறுதியளித்தார். (மத். 10 : 40,42) மிஷனெரிகளைப் புத்துணர்வடையச் செய்ய இதோ சில வழிமுறைகள்....

அ) மிஷனெரிகளின் உடல்நிலை பாதிக்கப்படும்போது அவர்களுக்கு சிறந்த மருத்துவ உதவிகள் கிடைக்க அவர்களுக்கு நிதி உதவி செய்யலாம்.

ஆ) மிஷனெரிகளின் சம்பளத்தில் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவதில் உள்ள சிரமத்தில் படிப்பிற்காக, உடைக்காக என்று நம் பிள்ளைகள் போல் உதவி செய்யலாம்.

இ) குறைவான மிஷனெரி உதவித் தொகையில் அவர்களால் வாங்க இயலாத நவீன சமையலறை மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான சாதனங்களை வாங்கிக் கொடுத்து ஊக்குவிக்கலாம்.

ஈ) கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்கள், மிஷனெரிமார்களின் திருமணநாள், பிள்ளைகளின் பிறந்த நாட்களில் குறிப்பாக அவர்களுக்கு சிறப்பு வெகுமதிகளைக் கொடுத்து உற்சாகப்படுத்தலாம்.

**4. களப்பணியை ஊக்குவித்தல்:**

மிஷனெரிகளது பிரச்சனைகளில் முக்கியமானதொன்று தனிமையே, கன்னிக்களங்களிலும் தொலைவிடக் கிராமங்களிலும் உழைப்போருக்கு ஐக்கியம் மிகக் குறைவு. மிஷனெரிக்குத் தேவையான ஆன்மீக ஐக்கியம் புதிய கள விசுவாசிகளிடமிருந்து கிடைத்து விடாது. ஊழியத்தைத் தாங்கும் சபையினர் மற்றும் குழுவினர் அவ்வப்போது பணிக்களங்களுக்குச் சென்று வருவது மிஷனெரிகளுக்குப் பேரூக்கம் தரும்.

ஊழியத் தாங்கிகள் களங்களுக்குச் சென்று வருவது புதிய சபையினரையும் ஊற்சாகப்படுத்தும். தாங்கள் தனியாக இல்லை; பெரிய கூட்டமொன்றில் சேர்ந்திருக்கிறார்களென்று அவர்கள் உணருவர். கிறிஸ்தவ வட்டாரங்களைப் போலல்லாது, சிலை வணக்கம் அல்லது இயற்கை வணக்கப் பின்னணிகளிலிருந்து மனந்திரும்பி வருவோருக்குத் தங்கள் இனத்தார் மற்றும் அயலகத்தாரிடமிருந்து வரும் பிரச்சனைகள் கொஞ்சநஞ்சமல்ல. தங்கள் விசுவாசத்திற்காய் இப்புது விசுவாசிகள் கிரயம் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் நாம் அவரக்ள் குடில்களுக்கும் வயல்களுக்கும் சென்று, சுகநலன் விசாரித்து, அவர்களது கலாச்சாரத்தை ஆவலாய்க் கண்டறிந்து, அவர்களோடு உணவருந்தி, ஆராதனையில் கலந்து கொள்ளும்போது அவர்கள் எவ்வளவாய் மலர்ந்துவிடுகின்றனர்! இவ்வித விஷயங்கள் தங்கள் ஊழியத்தை வெகுவாய் தூக்கிவிடுகின்றனவென்று மிஷனெரிகள் சாட்சி பகருகின்றனர்.

நாம் களங்களுக்குச் செல்வதால் மிஷனெரிகளும் புதுச்சபையினரும் உற்சாகமடையும் அதே வேளையில் நாமும் பெரும் சவாலடைகிறோம். நேரில் பார்ப்பதற்கு நிகரில்லை. நமது ஜெபங்கள் பின்னர் கூடுதல் அர்த்தமுள்ளவைகளாகின்றன. அரசும் பல தனி நிறுவனங்களும் தங்கள் பணிளாளருக்கு விடுமுறைப் பயணச் சலுகைகள் (LTC) அளிக்கின்றன. தூரவிடப் பணிக்களங்களுக்குச் சென்றுவர நீங்கள் இதை ஏன் பயன்படுத்தக்கூடாது? வெளிநாடுகளில் பணிபுரிந்து விடுமுறையில் தாயகம் வரும் இந்திய நண்பரே, மிஷனெரிப் பணிக்களம் ஒன்றையாவது பார்த்துவிட்டு வரவேண்டுமென்று இந்தியா வருமுன்னரே திட்டமிடுங்கள். துர்ப்பாக்கியமாக, இவ்வித நண்பர் பலர் இன்னும் ஓர் ஆசீர்வாத ஜெபம் நாடி சுயாதீன சுவிசேஷ ஊழியரை தரிசிப்பதிலேயே கரிசனை கொண்டுள்ளனர்! எது முக்கியமென்று தீவிரமாயச் சிந்தியுங்கள். மேய்ப்பனற்ற திரள்களை நோக்கியே நல் மேய்ப்பரின் இருதயம் சென்று கொண்டிருக்கிறது (மத். 9:36–38) அவரது ஆடு தேடும் படலத்தில் சேருவீர்!

**5. ஆத்தும ஆதாயப் பணியில் ஈடுபடுதல்**

"போ அல்லது அனுப்பு" என்பது மேற்கத்திய நாட்டு வாலிபரைக் கிழக்கு நாடுகளின் மிஷனெரிப்பணியில் ஈடுபடச் செய்யும்படி கனடா நாட்டு மிஷனெரிப்பணி மேதைப் பண்டிதர் ஆஸ்வால்டு J. ஸ்மித் (1890–1986) என்பவர் எழுப்பிய முழக்கமாகும். இந்தியாவைப் பொறுத்தவரை, அதுவும் இப்படிப்பட்ட காலக்கட்டத்தில், இம்முழக்கம் நம்மை முடக்கிப்போடும். போதல் அல்லது அனுப்புதல் என்று நாம் தெரிந்து கொள்ள இடமில்லை. தன்னால் முடிந்த இடங்களுக்கெல்லாம் ஒவ்வொரு கிறிஸ்தவனும் போகவேண்டும். அத்துடன், தான் போகமுடியாத இடங்களுக்குப் பிறரை அனுப்ப அவன் உதவவேண்டும். "போ அத்துடன் அனுப்பு" என்பதே நமது கோஷமாயிருக்க வேண்டும். இதுவே திருவசனத்திற்கும் நெருங்கியது.

இயேசு தமது சீடரை அறுவடைக் களத்திற்கு அனுப்பி வைத்தார். தாமும் புறப்பட்டுச் சென்றார். பவுலும், அப்படியே, சுற்றுப்புறச் சுவிசேஷப்பணியின் விரிவாக்கமே தொலைவிட மிஷனெரிப்பணி. இதை உயிர்த்தெழுந்த நமதாண்டவர் பரமேறுமுன் விரிந்து கொண்டே செல்லும் நான்கு வட்டங்கள் வரைந்து அழகாய் விளக்கினார். (அப். 1: 8) எருசலேம், யூதேயா, சமாரியா, அகிலவுலகு! ஒன்றன்பின் ஒன்றல்ல ஒன்றோடு ஒன்று.

மிஷனெரிகளைத் தாங்குவோர் தனியார் ஆத்தும ஆதாயராகவும் இருக்க வேணடும். ஆத்துமாதாயகரை விட ஊழியத்தாங்கிகளின் எண்ணிக்கையே சபையில் கூடினால் அது பரிதாபம். தூண்கள் அவசியம்தான்; ஆனால் அரங்கம் முழுவதும் தூண்களாயிருந்தால் எப்படி? ஊழியத்தைத் தாங்குவோரைக் கண்டுபிடிப்பதிலேயே மிஷனெரித் தலைவர்களுக்குப் பல சமயங்களில் கரிசனை கூடிவிடுவதால், சபையினரைச் சுற்றுப்புறச் சுவிசேஷப் பணியில் ஈடுபடுத்தும் ஆர்வம் இல்லாது போகிறது. முழுநேர மிஷனெரிப் பணிக்குத் தரமான நபர்கள் சபைகளிலிருந்து நமக்குக் கிடையாததற்கு இது ஒரு காரணம். முன்னணிப் பணிக்குப் படைவீரரை அனுப்பும் பயிற்சிக் கூடமாய் உள்ளூர் சபை திகழ வேண்டும். மாற்றுக் கலாச்சார மிஷனெரிப் பணிக்குச் சென்ற முதற்குழு பவுலும் பா்னபாவுமே. அவர்கள் ஓர் உள்ளூர்ச் சபையிலிருந்தே புறப்பட்டுச் சென்றனர். (அப். 13:1–4)

மிஷனெரி ஊழியத் தாங்கிகள் ஆத்துமாதாயகராய்ச் செயல்படாவிடில் நாளாவட்டத்தில் அவர்களது தரிசனமும் தாகமும் குன்றிவிடும். மீன் பிடிப்பதிலும் பயிர் அறுப்பதிலும் கிடைக்கும் மகிழ்ச்சியே அன்னாரைத் துடிப்பாயிருக்கச் செய்யும். மற்றபடி மிஷனெரிப் பணிக்காய்ப் பணம் திரட்டுவதும் இன்னொரு வியாபாரமாகிவிடும். ஆத்துமாதாயகரே ஆத்துமாதாயகரின் போராட்டங்களை நன்குணரமுடியும். அயலகமோ அயலூரோ எங்கு ஆத்துமாதாயம் செய்தாலும் அது சாத்தானின் பிடியிலிருந்து கைதிகளை விடுவிக்கும் போராட்டமே. "ஒவ்வொரு கிறிஸ்தவனையும் ஆத்துமாதாயப் பணிக்குள் உந்தித் தள்ளும் எழுப்புதலே புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை முடிவாய்த் திரும்பக் கொண்டுவரும்" என்று மிஷனெரி சுவிசேஷகர் T.L. ஆஸ்போர்ன் தீர்க்கமாய் எழுதினார்!

தொகுத்துக்கூறின், மிஷனெரிகளை அனுப்புவதும் பணிக்காகவும் பணியாளருக்காகவும் ஜெபிப்பதையும், தாராளமாய்க் கொடுப்பதையும், மிஷனெரிகளுக்குப் புத்துணர்வூட்டுவதையும், நேரில் சென்று மிஷனெரிகளையும், புது விசுவாசிகளையும் உற்சாகப்படுத்துவதையும், சுற்றுப்புறச் சுவிசேஷப் பணியில் நேரடியாய் ஈடுபடுவதையும் உள்ளடக்கும். இவைகளை உத்தமமாய்ச் செய்தால், போவோரைப் போலவே அனுப்புவோரும் பரிசு பெறுவர்! (1சாமு. 25:13, 30:24; 3யோ. 8)

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **"கல்வி அறிவு வளர்ச்சி"** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **Shalom Charity Mission –** என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission –** மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாக திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும்.

Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission –** என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

***மேலும் குழந்தை ஆதரவுத் தொகை*** அனுப்புவோர் **Shalom Charity Mission –** என்ற பெயருகே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **யோகான் பாரியா** |
| தந்தையின் பெயர் | : | காலு பாரியா |
| தாயாரின் பெயர் | : | கேத்தா பாரியா |
| பிறந்த நாள் | : | 14.03.1998 |
| படிக்கும் வகுப்பு | : | 7ம் வகுப்பு |
| சொந்த ஊர் | : | வரம்கேடா |
| மாவட்டம் | : | தாகோத் |
| மாநிலம் | : | குஜராத் |

## மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–

யோகான் பாரியாவின் தந்தை காலு பாரியா பிற மதத்தைச் சார்ந்தவராவார். இந்த சூழ்நிலையில் இவர்கள் வீட்டில் சமாதானமற்று இருந்தார்கள். மேலும் யோகான் பாரியாவின் தாயார் அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டு மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த சூழ்நிலையில் அவர்களுக்கு சமாதானம் கொடுக்கவோ, அசுத்த ஆவியிடமிருந்து அவர்களை விடுவிக்கவோ யாரும் இல்லை. மிகவும் மனம் நொந்து போன நிலைமையில் இருக்கும்போது, அவர்கள் கிராமத்தில் நடக்கும் இயேசு கிறிஸ்துவின் ஜெபக் கூட்டத்தைக் குறித்தும், அங்கு சென்றால் தேவன் தங்களது கட்டுகளை அவிழ்ப்பார் என்றும் கேள்விப்பட்டு அங்கே குடும்பத்துடன் சென்றனர். அந்த சுதேச ஊழியரும் இவர்களுக்காக பாரத்துடன் ஜெபித்தார். இந்த வேளையில் யோகான் பாரியாவின் தாயாரைப் பிடித்திருந்த அசுத்த ஆவியின் பிடியில் இருந்து தேவன் விடுதலை கொடுத்தார். இவர்கள் குடும்பமாக இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். மேலும் தேவன் இவர்களை ஆசீர்வதித்து, சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தந்தருளினார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:–** நன்றாக படிப்பான், நன்றாக ஜெபம் செய்வான்.

**ஜெபியுங்கள்:–** இவன் நன்றாக படிக்க, தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும் ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :** ஷாலோம் A.G. சபை ( Pr. ராஜாராம் ) தூத்துக்குடி.

நீங்களும் மாதம் ரூ. 500/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்தலாம்.

# இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி மூலமாக பீல் விசுவாசிகளுக்கு வழங்கப்பட்ட பரிசுத்த வேதாகமங்கள்



ஆராதனை வேளை



ஜெப வேளை



வேதாகமத்தின் முக்கியத்துவங்களைக் கூறும் Dr. Samuel Chauhan அவர்கள்



ஊழியர்களிடம் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்கள் வேதாகமங்களை வழங்குகிறார்.

ஒரு சமயத்தில் வேதத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென மனம் போன போக்கில் பாவத்திலும், சாபத்திலும், பிசாசின் கட்டுகளிலும் வாழ்ந்து வந்த பீல் ஆதிவாசி மக்கள் பல ஆயிரங்களை தேவனிடம் கொண்டு வந்ததில் "இயேசு விடுவிக்கிறார்" ஊழியத்திற்கு மிகப் பெரும் பங்கு உண்டு என்று கூறுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

மேலும் ஒவ்வொரு வருடமும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் மூப்பர்களுக்கு நமது பங்காளர்கள் மூலமாக வேதாகமங்கள் ஹிந்தி மற்றும் குஜராத்தி மொழியில் வழங்கி வருகிறோம். அதே போல் இந்த ஆண்டும் நமது விசுவாசிகள் மற்றும் மூப்பர்களுக்கு மொத்தம் **10000 வேதாகமங்கள்** தேவைப்பட்டன. இந்த வேதாகமத் தேவையை அறிந்த சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் "இயேசு விடுவிக்கிறார்" ஊழியத்தின் மூலமாக **5000 பரிசுத்த வேதாகமங்கள்** கொடுக்க முன்வந்தார். அதன்படி முதற் கட்டமாக 1000 பரிசுத்த வேதாகமங்கள் குஜராத் விசுவாசிகளுக்கு குஜராத்தி மொழியில் 07.08.2010 சனிக்கிழமையன்று, Dr. Samuel Chauhan (Bible Society of India, Gujarat) அவர்களால் ஜெபித்து ஆசீர்வதிக்கப்பட்டு வேதாகமங்கள் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்கள் மூலம் சுதேச ஊழியர்களிடத்தில் வழங்கப்பட்டன. மேலும் Dr. Samuel Chauhan அவர்கள் பரிசுத்த வேதாகமத்தின் இன்றைய முக்கியத்துவத்தைக் குறித்து வந்திருந்த சுதேச ஊழியர்களுக்கும், சபை மூப்பர்களுக்கும் நன்கு விளக்கிக் கூறினார்கள். குஜராத்தி மொழியில் 1000 வேதாகமங்கள் சுமார் 85 சபைகளுக்கு, அவர்களின் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளிக்கப்பட்டது. சபை ஊழியர்களும், மூப்பர்களும் மிக்க மகிழ்ச்சியுடன் வாங்கிச் சென்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

மேலும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களுக்காகவும், "இயேசு விடுவிக்கிறார்" ஊழியங்களுக்காகவும், இவ்வூழியத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியக் குடும்பங்களுக்காகவும் ஜெபித்து, தங்களின் நன்றி நிறைந்த உள்ளத்தினை வெளிப்படுத்துகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!



சத்தியமங்கலத்தில் நடைபெற்ற

## எழுப்புதல் பெருவிழா (ஆகஸ்ட் 13,14&15-2010)



தேவ செய்தி – Rt. Rev. Dr. V. தேவதாஸ்



பணித்தள செய்தி – சகோதரி வஹிதா தேவதாஸ்





கூடியிருந்த தேவ ஜனங்கள்

## சத்தியமங்கலத்தில் நடைபெற்ற மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை




சுதேச ஊழியரின் சாட்சி வேளை



மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை வேளை



தேவ செய்தி – Rt. Rev. Dr. V. தேவதாஸ்



மிஷனெரிகளுக்கு அன்பளிப்புகள் வழங்கப்படுகின்றன

*சத்தியமங்கலத்தில்....*

# எழுப்புதல் பெருவிழா

சத்தியமங்கலத்தில் சபைகள் மற்றும் ஷாலோம் ஊழிய பங்காளர்கள் எழுப்புதலையும், ஆசீர்வாதங்களையும் பெறுவதற்கு, கர்த்தருக்குச் சித்தமானால் சத்தியமங்கல வட்டார சபைகளாக இணைந்து ஷாலோம் ஊழியம் மூலமாக எழுப்புதல் பெருவிழா ஆகஸ்ட் 13,14 & 15 ஆகிய நாட்களில் நடத்த வேண்டும் என்று பல மாதங்களாக ஜெபித்துக் காத்திருந்தோம். எத்தனையோ தடைகள், பிரச்சனைகள் எழும்பினபோதும் தேவன்தாமே எங்களது ஜெபங்களைக் கேட்டு அந்த மூன்று நாட்களிலும் எழுப்புதல் பெருவிழாவை மிகவும் சிறப்பாக நடத்தித் தந்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

13.08.2010 அன்று இரவுக் கூட்டம் முதல் கூடுகையை ஹோலி டேபர்நேகிள் சபை போதகர் **Pr. பிரேம் குமார்** அவர்கள் ஜெபித்து ஆரம்பிக்க **Pr. மனுவேல் தனராஜ்** & **Pr. ராபர்ட் செல்லையா** (சத்தியமங்கலம் பெத்தேல் சபை போதகர்கள்) ஆகிய போதகர்கள் பாடல்கள் மற்றும் ஆராதனைகளை மூன்று நாட்களும் பொறுப்பேற்று மிக நேர்த்தியாக நடத்தித் தந்தார்கள். தேவ பிரசன்னத்தில் அனைவரும் நிரப்பப்பட்டார்கள். **Rt. Rev. Dr. V. தேவதாஸ்** அவர்கள் **"நோவாவின் இரட்சிப்பின் பேழை"** –யைக் குறித்து செய்தியளித்தார்கள். வந்திருந்த அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது.

14.08.2010 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் 3.00 மணி வரை அனைத்து சபை போதகர்கள், சபை மூப்பர்களுக்கான **"திருச்சபை வளர்ச்சி"** என்ற சிறப்புக் கூடுகை நடைபெற்றது. இந்தக் கூடுகையில் **Rt. Rev. Dr. V. தேவதாஸ்** அவர்கள் அப்போஸ்தல நடபடிகளிலிருந்து 10 காரியங்களை, சபைகளைக் குறித்த தேவனுடைய சிந்தை எப்படியிருக்கிறது என்பதையும், தங்கள் 25 வருட ஊழியத்தில் சபை வளர தேவன் கற்றுத் தந்த காரியங்களையும் ஆத்தும பாரத்துடன் பகிர்ந்து கொண்டார்கள். ஜெப வேளையின் போது கூடி வந்த அனைவரும் எழுப்புதலின் அபிஷேகத்தை பரிசுத்த ஆவியானவர் மூலமாக பெற்றார்கள்.

14.08.2010 சனிக்கிழமை இரவு கூட்டத்தில் மண்டபம் நிறைந்து வழிந்தது. ஆவலுடன் கூடி வந்த தேவ ஜனங்கள் ஆராதித்த பின் **"நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள் நான் உங்கள் தேவனாயிருப்பேன்"** எரேமியா 30:12 என்ற வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களை ஆவியானவரின் நிறைவுடன் **Rt. Rev. Dr. V. தேவதாஸ்** அவர்கள் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொண்ட போது பாவம், சாபம் நோய்களிலிருந்து தேவன் விடுதலையையும் பரலோக அபிஷேகத்தையும் அனைவருக்கும் தேவன் தந்து ஆசீர்வதித்தார்.

***மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை:–***

15.08.2010 ஞாயிற்றுக்கிழமை சத்தியமங்கலம் **“ஜீவ வார்த்தை A.G. சபையில்”** வைத்து குஜராத்தில் ஊழியம் செய்து வரும் நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் **சகோ. பரத்பாய் சாரேல்** (ஹடுமத் கிராமம்), **சகோ. நவல்புரியா** (சாலபாடா கிராமம்) ஆகிய இரண்டு ஊழியர்களும் தங்களது சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டனர். அதன்பின் **Rt. Rev. Dr. V. தேவதாஸ்** அவர்கள் மிஷனெரி செய்தியைப் பகிர்ந்த கொண்டார்கள். பின்னர் **Pr. அன்டனி மைக்கேல்** அவர்கள் தலைமையில் சபையார் ஒருமனதாய் ஜெபித்து தாங்க அர்ப்பணித்து மிஷனெரிகளை பிரதிஷ்டை செய்தனர். மிஷனெரி பிரதிஷ்டைக்குப் பின் சபை போதகர் அம்மா அவர்கள் ஜெபித்து மிஷனெரிகளுக்கு வேதாகமங்களையும், ஒரு மிஷனெரியைத் தாங்கும் சபை போதகர் குடும்பம், திரு. ஜஸ்டஸ் அவர்கள் குடும்பம் மற்றும் சபையார் இணைந்து மிஷனெரிகளுக்கு சூட்கேஸ் மற்றும் DVD Player போன்ற அன்பளிப்புகளை வழங்கினார்கள். இந்த ஆராதனையில் தேவனுடைய மகிமை அதிகமாய் வெளிப்பட்டது. அதன்பின் **Rt. Rev. Dr. V. தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளிக்கும்போது, குறிப்பாக தாவீது தேவனுடைய மனதுக்கு ஏற்றவனாக எப்படி காணப்பட்டான் என்பதை சாட்சிகள் மூலமாக எடுத்துரைத்தபோது தேவ ஜனங்கள் தங்களை அர்ப்பணித்தார்கள். தேவனுடைய விஷேசித்த அபிஷேகத்தாலும் ஆத்தும பாரத்தினாலும் அவர்கள் நிரப்பப்பட்டார்கள். இந்த மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனையை நேர்த்தியாக ஒழுங்கு செய்திருந்தது **Pr. அன்டனி மைக்கேல்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

அதே நாளில் சத்தியமங்கலத்திலுள்ள **“பெத்தேல் சபையில்”** சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் **“இயேசுவின் நாமம்”** என்ற தலைப்பில் தேவசெய்தி அளித்தார்கள். மேலும் ஜெபவேளையில் சபையார் அனவரும் “இயேசுவின் நாமத்தில்” ஆசீர்வாதங்களையும், அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டார்கள். இந்தக் கூடுகையை ஒழுங்கு செய்து அன்புடன் ஏற்றுக் கொண்ட போதகர்கள் **Pr. மங்கள் தனராஜ், Pr. ராபர்ட் செல்லையா** மற்றும் **Pr. பிரேம்குமார்** ஆகியோருக்காக தேவனைத் துதிக்கிறோம்.

மேலும் பவானிசாகரிலுள்ள ஹோலி டேபர்நேகிள் சபை போதகர் **Pr. பிரேம் குமார்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களையும், Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்கள் குடும்பத்தையும் அதிகம் நேசிக்கிறவர்கள். அவர்களுடைய சபையில் தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில்லிருந்து வந்திருந்த முன்னேற்றப் பணியாளர் **சகோ. ரதீஸ்** அவர்கள் **“கர்த்தரே என் பங்கு”** என்ற தலைப்பில் கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ளவும், ஷாலோம் ஊழியக் காரியங்களை பகிர்ந்து கொண்டு, விசுவாசிகளை உற்றாகப்படுத்தவும் தேவன் கிருபை செய்தார்.

இறுதி நாள் (15.08.2010) இரவுக் கூட்டத்தில் மண்டபத்திற்குள் இடம் இல்லாதபடியினால் அநேகர் வெளியிலும் இருந்து தேவனை ஆராதித்தார்கள். **"நீங்களே இவர்களுக்கு போஜனம் கொடுங்கள்"** என்ற தலைப்பில் வந்திருந்த தேவ ஜனங்களுக்கு மிஷனெரி அறைகூவல் செய்தியை **Rt. Rev. Dr. V. தேவதாஸ்** அவர்கள் கொடுத்தார்கள். சிலர் தேவாலயங்களைக் கட்டவும், மிஷனெரிகளைத் தாங்கவும், சிறுவர் ஊழியங்களைத் தாங்கவும் தங்களை அர்ப்பணித்தார்கள். மேலும் அனைவரும் இணைந்து பீல் மக்களுக்கு ஆலயம் கட்டிக் கொடுக்க ரூ. 31,000/– காணிக்கையாகக் கொடுத்தார்கள். தேவனுக்கே மகிமை! அதன்பின் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் **"தானியேலின் காரியம் எப்படி ஜெயமாக இருந்தது, கர்த்தர் அவனை எப்படி மேன்மையாக வைத்தார்"** என்பதைக் குறித்து தேவ செய்தியளித்தார்கள். அனைவரும் அனல் மூட்டப்பட்டவர்களாய், தானியேல் போல தேசத்திற்கு ஆசீர்வாதமாக மாற தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். தேவனுடைய அபிஷேகம், அருள் மாரி ஊற்றப்பட்டது. மெய்யாகவே இந்த மூன்று நாட்களும் சத்தியமங்கல வட்டாரத்தில் எழுப்புதலின் உள்ளங்கை அளவு மேகத்தைக் காணமுடிந்தது. தேவனுக்கே மகிமை!

இந்த கூட்டங்களின் செலவுக்காக சத்தியமங்கல வட்டார தேவ ஜனங்கள் உற்சாகமாக காணிக்கைக் கொடுத்தார்கள். இந்த கூட்டங்களுக்காக ஷாலோம் ஊழியத்திலிருந்து நாம் எதுவும் பெற்றுக் கொள்ளாதபடி தேவன் தேவைகளைச் சந்தித்தார். மேலும் கூட்டங்களுக்காக உழைத்த ஜெபித்த, கொடுத்த போதகர்கள் மற்றும் பங்காளர்கள் அனைவருக்கும் நன்றி கூறி தேவனைத் துதிக்கிறோம். **Rt. Rev. Dr. V. தேவதாஸ்** அவர்களையும், **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்களையும் பீல் மக்கள் இரட்சிப்பின் பணியில் தேவன் வல்லமையாக பயன்படுத்தி வருகிறார். இவர்கள் செய்துவரும் ஷாலோம் ஊழியங்களுக்காகவும், குடும்பத்திற்காகவும் தொடர்ந்து ஜெபிக்கவும், தொடர்ந்து ஊழியங்களைத் தாங்கவும் அன்புடன் அழைக்கிறோம்.

---

## இணையதளத்தில் நமது
## அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்




*பிரியமானவர்களே,*

நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்த **"அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்"** இதழை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**web address : http://www.shalommission.in**

## வெண்ணங்கி தரித்தோர் வரிசையில்




பெயர்

**Rev. ரமன் ரட்டுவா**

வயது : **64,**

இறப்பு

**05.08.2010**

Rev. ரமன் ரட்டுவா – நமது ஷாலோம் பணித்தளமான, குஜராத் மாநிலத்திலுள்ள பரோடா மாவட்டம், தேவ்கட் கிராமத்தில் இயேசு கிறிஸ்துவை அறியாத ஒரு பீல் ஆதிவாசியாகப் பிறந்து மனம் போன போக்கிலும் பாவத்திலும், சாபத்திலும் வாழ்ந்து வந்த இவர் தேவன் தனக்குச் செய்த அற்புதத்தின் மூலம் தொடப்பட்டு, இரட்சிக்கப்பட்டு, அபிஷேகிக்கப்பட்ட அவருடைய சொந்த கிராமத்தில், மிகவும் வல்லமையா ஊழியம் செய்து வந்தார். தேவன் இவரை மிகவும் வல்லமையாகவும், அற்புதங்களுடனும், அடையாளங்களுடனும் பயன்படுத்திவந்தார். குறிப்பாக தேவன் இவர் மூலமாக மரித்துப்போன ஒரு பெண்ணை உயிரோடு எழுப்பினார். மேலும், 2002 ஆம் ஆண்டு இவரது கிராமத்தில் ஆலயம் கட்டி பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஏறக்குறை ஐம்பதிற்கும் அதிகமான குடும்பத்தாரை தேவனண்டையில் வழி நடத்தி வந்தார்.

மேலும் தேவனுடைய வேதத்தை நன்கு தியானிப்பவராகவும், ஜெபத்தில் நிலைத்திருப்பவராகவும், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுபவராகவும் வாழ்ந்து வந்தார். மேலும் இவர் நமது Shalom Diocese in India உருவானபோது, போதகராக அபிஷேகம் செய்யப்பட்டு ஊழியம் செய்து வந்த இவர் 05.08.2010 அன்று தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள் பிரவேசித்துள்ளார்.

இவரது மனைவிக்காகவும், நான்கு பிள்ளைகளுக்காவும், பேரப்பிள்ளைகளுக்காகவும், அவர்களின் ஆறுதலுக்காகவும் ஜெபியுங்கள். மேலும் இவர் விட்டுச் சென்ற ஊழியத்தை தொடர்ந்து நிறைவேற்ற தேவன் ஒரு ஊழியரை எழுப்பவும் ஜெபியுங்கள்.

நாம் ஒரு நல்ல சுதேச ஊழியரை இழந்தாலும், அவர் தற்போது தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசித்துள்ளமைக்காகவும், அவருடைய பரிசுத்தமான வாழ்க்கைக்காகவும், ஊழியத்திற்காகவும் தேவனை துதிப்போமாக. தேவன்தாமே அவருடைய குடும்பத்திற்கு ஆறுதலையும் தேறுதலையும் தந்தருள்வாராக.

# இந்தியாவில் சுவிஷேசம்

- ✞ கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும். (ஏசா 40:5)
- ✞ உலகளவில் மிஷனெரி ஸ்தாபனங்களில் 1/3 இந்தியாவில் உள்ளன.
- ✞ உலகளவில் நற்செய்தி அறிவிக்கப்படாத மக்களினங்களில் 25 % பேர் இந்தியாவில் உள்ளனர்.
- ✞ இந்தியாவில் இயேசுவை அறியாத 3.5 – இலட்சம் கிராமங்கள் உள்ளன. இங்கு 40– கோடி பேருக்கு இயேசு அறிவிக்கப்படவில்லை.
- ✞ இந்தியாவில் முஸ்லீம்களில் 98 % பேருக்கு சுவிசேஷம் செல்லவில்லை.
- ✞ இந்தியாவில் 30,000– க்கும் அதிகமான மக்கள் கொண்ட 204– இன மக்கள் உள்ளனர். 2,600 இனமக்களிடையே ஒரு சபை கூட இல்லை.
- ✞ இந்தியாவில் சுமார் 3000 – மிஷனெரி ஸ்தாபனங்கள், 20,000 – மிஷனெரிகளுடன் 2000 பணித்தளங்களில் ஊழியஞ்செய்து வருகின்றன.
- ✞ இந்தியாவில் 165– மொழிகளில் சுவிசேஷ ஒலிநாடாக்கள் உள்ளன.
- ✞ இந்தியாவில் 13–கோடி பேருக்கு ரேடியோ, தொலைக்காட்சி மூலம் அறிவிக்கப்படும் சுவிசேஷ ஒளிபரப்பு சென்றடைவதில்லை.
- ✞ இந்தியாவில் 21 மொழிகளில் இயேசுவின் திரைப்படம் வந்துள்ளது.
- ✞ இந்தியாவில் ஆண்டிற்கு 39 மொழிகளில் 50 இலட்சம் துண்டுப்பிரதிகளில் தேவனுடைய செய்திகள் அச்சிடப்படுகிறது.
- ✞ இந்தியாவில் 1 இலட்சத்திற்கும் மேல் முழுநேர ஊழியர்கள் உள்ளனர்.
- ✞ இந்தியாவில் கிறிஸ்தவர்கள் 70% தென் மாநிலங்கள், 25% வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் 5% வடக்கு, மேற்கு மாநிலங்களில் உள்ளனர்.
- ✞ இந்தியாவிலுள்ள வடகிழக்கு மாநிலங்களான மிசோரம், நாகலாந்து, மேகாலயா ஆகிய மாநிலங்களில் 95% பேர் கிறிஸ்தவர்களாக உள்ளனர்.
- ✞ இந்தியாவில் சுமார் 5 கோடிக்கும் அதிகமாக கிறிஸ்தவர்கள் உள்ளனர்.
- ✞ இந்தியாவில் சுமார் 1 கோடி பேர் இரகசிய கிறிஸ்தவர்களாக உள்ளனர்.
- ✞ இந்தியாவில் சுமார் 30% கிறிஸ்தவர்கள் நகரங்களில் வாழ்கின்றனர்.
- ✞ இந்தியாவில் மாதத்திற்கு 200 ஆவிக்குரிய சபைகள் உருவாகின்றன.
- ✞ இந்தியாவில் தினமும் 6,000 பேர் சபைகளில் சேர்க்கப்படுகின்றனர்.
- ✞ இந்தியாவில் கிறிஸ்தவர்களின் உழைப்பும், பணமும் 90% கிறிஸ்தவர்களிடையே நடைபெறும் ஊழியங்களுக்காக செலவிடப்படுகின்றது.
- ✞ இந்தியாவிலுள்ள வேதாகமக் கல்லூரிகளில் படிக்கும் வாலிப சகோதர, சகோதரிகளில் சுமார் 10% பேரே ஊழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

- ✞ இந்தியாவிலுள்ள 28,000 பின்கோடுகளில் சுமார் 18,000 பின்கோடுகளில் ஒரு கிறிஸ்தவர்கள் கூட இல்லை.
- ✞ இந்தியாவில் மனிதர்களைக் கொன்று சாப்பிடும் சில பழங்குடி ஆதிவாசிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதால் அநேகர் மனம் மாறியுள்ளனர்.
- ✞ இந்தியாவில் வடபீகார் மிகக்குறைந்த அளவு சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட மிக அதிகமான மக்கள் தொகை உள்ள பகுதியாகும்.
- ✞ இந்தியாவில் கிறிஸ்தவர்களின் மேம்பாட்டிற்காக வெளிநாட்டிலிருந்து வரும் உதவிகளை மதவாத இயக்கங்கள் தடைச் செய்து வருகின்றது.
- ✞ இந்தியாவில் சிறுபான்மையினரின் பத்திரிகைச் சுதந்திரத்தை தடை செய்யும் நோக்கத்துடன் மதவாத இயக்கங்கள் செயல்பட்டு வருகின்றன.
- ✞ இந்தியாவில் ஜாதி, மத அடிப்படையில் பிரிவினையைத் தூண்டி கிறிஸ்தவர்களை அடக்குவதில் மதத் தீவிரவாதிகள் செயல்படுகின்றனர்.
- ✞ இந்தியாவில் கிறிஸ்தவர்களாக மாறிய தலித் மற்றும் பழங்குடி கிறிஸ்தவர்களை மீண்டும் மதம் மாற்ற மதத் தீவிரவாதிகள் வலியுறுத்துகின்றனர்.

## *இந்தியாவைக் குறித்த பொதுவான குறிப்புகள்*

- ☞ உலகளவில் மக்கள் தொகையில் இந்தியாவில் 15.3% பேர் உள்ளனர்.
- ☞ இந்தியாவில் 1901 ல் வாழ்ந்த மக்கள் தொகை 29,43,61,056.
- ☞ இந்தியாவில் மொத்த மக்கள் தொகை சுமார் 108.7 கோடியாகும்(2004).
- ☞ இந்தியாவில் ஆண்டிற்கு மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1.8 கோடி.
- ☞ இந்தியாவில் 50,000க்கும் அதிகமான மக்கள் உள்ள நகரங்கள் 784.
- ☞ இந்தியாவில் 2000 பேருக்கும் குறைவான 6இலட்சம் கிராமங்கள் உள்ளன.
- ☞ இந்தியாவில் 10,000 பேர் வரையுள்ள 953 இனமக்கள் உள்ளனர்.
- ☞ இந்தியாவில் 8 கோடி மக்கள் கொண்ட 452 இனமக்கள் உள்ளனர்.
- ☞ இந்தியாவில் சுமார் 150 மாவட்டங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளன.
- ☞ இந்தியாவில் 2.5 இலட்சம் கிராமங்களுக்குச் சாலை வசதிகள் கிடையாது.
- ☞ இந்தியாவில் 76,000 கிராமங்களுக்கு தகவல் தொடர்பு வசதி இல்லை.
- ☞ இந்தியாவிலுள்ள 57% கிராமப்புற மக்களுக்கு மின்வசதி கிடையாது.
- ☞ இந்தியாவிலுள்ள மக்கள் தொகையில் 35% பேர் எழுத்தறிவற்றவர்கள்.
- ☞ இந்தியாவில் 25,000 தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.
- ☞ இந்தியாவில் 12 இலட்சம் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உள்ளன.
- ☞ இந்தியாவில் 64 இலட்சத்திற்கும் அதிகமான கம்ப்யூட்டர்கள் உள்ளன.
- ☞ இந்தியாவில் 30 கோடி பேர் இன்டர்நெட்டை உபயோகிக்கின்றனர்.
- ☞ இந்தியாவில் 200 க்கும் அதிகமான தொலைக்காட்சி சேனல்கள் உள்ளன.
- ☞ இந்தியாவில் மக்கள் தொகையில் இஸ்லாமியர்கள் 2– வதாக உள்ளனர்.

- ☞ இந்தியாவில் இஸ்லாமியர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளனர்.
- ☞ இந்தியாவில் சுமார் 1.13 கோடி குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர்.
- ☞ இந்தியாவில் 6.2 கோடி பேர் குடிசை வாழ் பகுதிகளில் வாழ்கின்றனர்.
- ☞ இந்தியாவில் சுமார் 607 க்கும் அதிகமான நகரங்களில் குடிசைப் பகுதிகள் உள்ளன. இங்கு வாழும் மக்கள் சுமார் 5 கோடி பேர்.
- ☞ இந்தியாவில் 7 நிமிடத்திற்கு ஒரு கொடூரமான செயல் நடைபெறுகிறது.
- ☞ இந்தியாவில் சுமார் 35.04% பேர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர். இதில் 31.6% பேர் விவசாயிகள்; 68.4% பேர் விவசாயக் கூலிகள்.
- ☞ இந்தியாவில் 20 கோடி பேருக்கு ஒரு வேளை உணவே கிடைக்கிறது.
- ☞ இந்தியாவில் சுமார் 20–கோடி பேருக்கு இரவு உணவு கிடைப்பதில்லை.
- ☞ இந்தியாவில் 42–கோடி பேர் தினக்கூலிகளாக வேலை செய்கின்றனர்.
- ☞ இந்தியாவில் ஆண்டிற்கு 1.2 இலட்சம் பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். 12 இலட்சம் பேர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர்.
- ☞ இந்தியாவில் 24 இலட்சம் வழிபாட்டுத் தலங்கள், கோயில்கள் உள்ளன.
- ☞ இந்தியாவில் ஆண்டிற்கு சுமார் 7.5 கோடி பெண்கள் கருக்கலைப்பு செய்து கொள்கின்றனர்.
- ☞ இந்தியாவில் ஆண்டிற்கு சுமார் 7000 பெண்கள் வரதட்சணைக் கொடுமையினால் தீக்குளிப்பதாகத் திட்டக்கமிஷன் தெரிவித்துள்ளது.
- ☞ இந்தியாவில் ஆண்டிற்கு 4– கோடி பெண் சிசுக்கள் கொல்லப்படுகின்றன.
- ☞ இந்தியாவில் 24–கோடி பேர் புகையிலை, சிகரெட், பொடி, பான்பராக், அன்ஸ் போன்ற போதைப் பொருட்களை உபயோகிக்கின்றனர்.
- ☞ இந்தியாவில் சுமார் 60 இலட்சம் பேர் ஹேராயின், ஓப்பியம் போன்ற போதை மருந்துகளுக்கு அடிமைகளாக உள்ளனர்.
- ☞ இந்தியாவில் சுமார் 6.25 கோடி பேர் மதுபான பழக்கமுடையவர்கள்.
- ☞ இந்தியாவில் 2.5 கோடி பேர் ஓரினச் சேர்க்கை பழக்கமுள்ளவர்கள்.
- ☞ இந்தியாவில் சுமார் 23 இலட்சம் பேர் விபசாரத் தொழிலைச் செய்து வருகின்றனர். இதில் 25% பேர் 18–வயதிற்குட்பட்டவர்கள்.
- ☞ இந்தியாவில் ஆண்டிற்கு 10,000 பேர் விபத்துக்களினால் இறக்கின்றனர்.

**மேலும் இந்தியாவின் ஆசீர்வாதத்திற்காவும், இந்திய ஜனங்கள் அனைவரும் இரட்சிக்கப்படவும் பாரத்துடன் ஜெபியுங்கள்.**

## *அவசர ஜெபத்தேவை....*

நமது பணித்தளமான குஜராத்திலுள்ள பாடல்வா கிராமத்தில் நமது சுதேச ஊழியர் சகோ. ரமேஷ் வாசுனியா அவர்கள் ஊழியம் செய்து வருகிறார்கள். இவருக்கும், ஊழியங்களுக்கும் அங்குள்ள ஒரு சில சகோதரர்களால் எதிர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. மேலும் தேவன் இந்த பிரச்சனையிலிருந்து ஒரு பெரிய விடுதலையைத் தந்துள்ளார். இன்னும் பிரச்சனைகள் முற்றிலும் நீங்கவும், எதிர்ப்பு தெரிவிக்கும் சகோதரர்களை தேவன் தொடவும் ஜெபியுங்கள்.

## பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு

# வேதாகமத் திட்டம்


நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும்.

கடந்த 2008 மற்றும் 2009ம் ஆண்டுகளில் இந்திய வேதாகமச் சங்கம் குஜராத், அகமதாபாத் கிளை மூலமாக சுமார் 12 ஆயிரம் வேதப்புத்தகங்கள் வாங்கி நமது பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்குக் கொடுக்க தேவன் கிருபை செய்துள்ளார். குஜராத் மாநிலத்தில் அதிக வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்தமைக்காக ஷாலோம் ஊழியத்திற்கு இந்திய வேதாகமச் சங்கம் "சிறப்பு விருது" கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளது. அதற்காக தேவனைத் துதிக்கிறோம்...

உங்களில் பலர் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமம் வாங்கிக் கொடுக்கும்படியாக உதாரத்துவமான காணிக்கை அளித்துள்ளீர்கள். இதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

2010ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக 10000 (ஹிந்தி & குஜராத்தி) வேதாகமங்கள் தேவைப்பட்டன. இதில் 5000 வேதாகமங்கள் **இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி** ஊழியங்கள் மூலமாக கொடுக்கப்படவுள்ளன. மேலும் ரூ. 80 வீதம் 5000 வேதாகமங்களுக்கு நிதி உதவித் தேவைப்படுகிறது. நிதி உதவி ரூ. 4 லட்சங்கள் கிடைக்கும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் உங்களால் முடிந்த வேதாகமங்களை வாங்கிக் கொடுக்கலாம். உங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் வாங்கிக் கொடுக்கச் சொல்லலாம். அதற்கான காணிக்கையை **SHARING LOVE MISSION** என்ற பெயரில் **D.D., M.O.** அல்லது **Cheque** மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவ திட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

# மாற்கு டேனியல் பண்டேன்



மிஷனெரி முன்னோடிகள்

**டேனியவல் மாற்கு பண்டேன்,** கனடாவில் வின்னிப்பெர்க் என்ற இடத்தில் 1923ஆம் ஆண்டு, ஜனவரி 26ஆம் தேதி பிறந்தார். பிரசங்கியாராகிய தன் தகப்பனார் பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்த மாற்கு, தானும் ஒரு பிரசங்கியாராக வேண்டுமென்று விருப்பம் கொண்டார். தன்னுடைய தாயின் தெய்வபக்தி அவரை அதிகம் கவர்ந்தது.

ஏழு வயது சிறுவனாக இருக்கும்போதே மாற்கு தன்னை தேவனுக்கென்று அர்ப்பணித்தார். உலகின் பல திசைகளுக்கும் சென்று ஊழியம் செய்த மிஷனெரிகளின் வரலாற்றைக் கேட்டபோதெல்லாம் மகிழ்ச்சியடைந்தார். ஆப்பிரிக்கா, லைபீரியா போன்ற நாடுகளுக்கும் சென்று ஊழியம் செய்த கென்ஸ்டிவன்சனின் வாழ்க்கை சரிதை அவரை அதிகம் கவர்ந்தது. லைபீரியாவில் ஊழியம் செய்த ரூத் அம்மையாரும் அவருடைய இதயத்தில் இடம் பிடித்தவர்களின் ஒருவர்.

1942–இல் வானொலி ஒன்றில் வேலை செய்ய வாய்ப்பு கிடைத்தது. டோரண்டோவிலிருந்து மாற்றுதலாகி சாத்தம் என்ற இடத்திற்கு இடம் பெயர்ந்தார் மாற்கு. ஒரு நாள் இரவு படுக்கைக்குச் செல்லும் முன்பு, ஆண்டவர் தன்னோடு பேசுவதை தெளிவாக உணர்ந்தார். உடனே தேவனுக்கு கீழ்ப்படிந்து தன்னுடைய வேலையை ராஜினாமா செய்துவிட்டு கடவுளுடைய வேலையை செய்யலானார். தன்னுடைய 21வது வயதில் சுவிசேஷகராகச் செல்வதற்கான அழைப்பை மாற்கு பெற்றார்.

1944ஆம் ஆண்டு நவம்பர் 2ம் தேதி அன்று ஒரு மிஷனெரியின் மகளாகிய ஹல்டாவை திருமணம் செய்து கொண்டார். 1952ஆம் ஆண்டு வெளிநாட்டுக்குச் சென்று உழியம் செய்ய வேண்டும் என்ற தனது விருப்பத்தை தன் மனைவியிடம் தெரிவித்தார். மூன்று மாதங்கள் ஆயின, அதற்குள் தேவனிடமிருந்து புதிய அழைப்பு வந்தது. உடனே மாற்கும், மாற்கின் மனைவி மற்றும், மனைவியின் தாயார் ஆகியோர் மிஷனெரி தலைமையகத்திலிருந்து கல்கத்தாவுக்குச் செல்லும்படி அனுப்பப்பட்டனர்.

இவர்கள் மூவரும் 1954ம் ஆண்டு அக்டோபர் 6ம் தேதி இந்தியா வந்து சேர்ந்தனர். மிஷன் ஆப் மெர்சி (Mission of Mercy) என்ற மாபெரும் ஊழியத்திற்கான அற்பமான ஆரம்பம் என்று அவர்களுக்கு தெரியாது. ஆரம்ப நாளிலிருந்து பலவிதமான கஷ்டங்கள், சோதனைகள்,

பண நெருக்கடிகள், தனிமை, என்று பல போராட்டம் அவர்களுக்கு இருந்தது. அவைகள், ஊழியத்தின் மத்தியில் ஒன்றுமில்லாமல் போய்விட்டன. இவர்கள் ஊழியம் ஏழை மக்களையும், சுகவீனரையும், பசியுற்றோரையும் தொட்டு, அவர்கள் வாழ்க்கை பிரகாசமடைய செய்கிறது என்ற உண்மை அவர்களை மெய் சிலிர்க்கச் செய்தது.

1964 ஆம் ஆண்டு மாற்குவின் குடும்பத்தினர் 230 மாணவர்களுடன் “அசெம்பிளீஸ் ஆப் காட்” என்ற பள்ளிக்கூடத்தை கல்கத்தாவில் நிறுவினர். இன்று பாலர் வகுப்பு முதல் இளநிலை கல்லூரி வரையில் வகுப்புகளைக் கொண்டு ஆலமரம் போல் பொலிவுடன் விளங்குகிறது. ஒரு தொழிற்கல்விக் கூடமும், ஆசிரியர் பயிற்சிக் கூடமும் இவர்கள் ஆரம்பித்தனர். தற்போது 10,0000 மாணவர்கள் கல்வி கற்கும் 20 பள்ளிகளாக மிஷன் ஆப் மெர்ஸி வளர்ந்திருக்கிறது.

1984ஆம் ஆண்டு மேற்கு வங்கத்தில் 15 மில்லியன் மக்கள், பெரு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட போது ஐக்கிய நாட்டுச் சபையுடன் சேர்ந்து, தங்கள் வீடுகளை இழந்து தவித்த மக்களுக்கு மாற்கும் அவரது குழுவினரும் உதவி செய்தனர். ஆதரவற்ற சிறுவர்களுக்கும் பள்ளிப் படிப்பை கைவிட்ட சிறுவர்களுக்கும் உதவும்படியாக சிறுவர் இல்லம் ஒன்றை மாற்கு பண்டேன் தொடங்கினார்.

மாணவர்களுக்கு உணவு அளிக்கும் திட்டத்தையும் ஆரம்பித்தார். ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு இத்திட்டம் பயன் அளித்தது. கல்கத்தாவின் குடிசைப்பகுதிகளில் 9 மையங்கள் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி இப்போது 20,000 மக்களுக்கு இலவசமாக ஒரு வேளை சாப்பாடு கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ. 1.5 லட்சம் ஒரு நாளைக்கு செலவாகின்றது. வயோதிகர் இல்லம் ஒன்று 1982ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மருத்துவ ஊழியம் ஆரம்பிக்க வேண்டும் என்ற கனவு 1977ல் கை கூடியது. அரசாங்கத்தால் இதற்கென்று ஒரு நிலம் வழங்கப்பட்டது. 16 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை ராப்டு நடத்தி வந்தார். அரசாங்கம் கொடுத்த நிலத்தில் 120 படுக்கைகள் கொண்ட பெரிய மருத்துவமனை கட்டி மார்ச் 1977–ல் பிரதிஷ்டை செய்தனர். இப்பொழுது இந்த மருத்துவமனை 175 படுக்கைகள் கொண்ட நவீன கருவிகள், திறமைப் பெற்ற மருத்துவர்கள், தாதியர்களுடன் செயல்பட்டு வருகிறது.

தேவனுக்கென்று 34 ஆண்டுகள் பல்வேறு ஊழியங்களை சிறப்பாகச் செய்து நிறைவேற்றிய மாற்கு பண்டேன், ஜுன் 3, 1989–ல் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவர் மரித்தாலும் அவர் ஊழியம் இன்றும் தொடர்கின்றது. தேவ சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிகிற தேவ மனிதர்களை தேவன் பயன்படுத்துகிறார்.

# ஜெபக்குறிப்புகள்

❖ முழு பீல் ஆதிவாசி மக்கள் நம் தலைமுறையில் இயேசுவை அறியவும், இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் நடைபெறும் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

❖ அலுவலக ஊழியர்களுக்கு தேவன் ஞானத்தையும், சுகத்தையும் கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.

❖ குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் 3 மாநிலங்களிலும் திருச்சபை ஒருங்கிணைப்பு பணி நடைபெற்று வருகிறது. தேவன் ஞானம் தந்து அனைவரும் இணைந்து ஒருமனமாகச் செயல்படவும் 3 மாநில ஒருங்கிணைப்பாளர்களை தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

❖ Shalom Charity Mission மூலமாக தாங்கப்படும் 750 பீல் ஆதிவாசி மாணவர்கள் மற்றும் Compassion மூலமாக தாங்கப்படும் 605 ஷாலோம் மாணவர்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள். கல்விப் பணிக்கான அதிகமான தேவைகள் ரூ. 4 இலட்சம் கிடைக்கப்பெற, இவ்வருடத்தில் மாதம் ரூ. 400 கொடுத்துத் தாங்கும் ஆதிவாசி மாணவ ஆதரவாளர்கள் 200 பேர்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

❖ இவ்வருடம் 3 மாநிலங்களில் 85 கிராமங்களில் ஆலயம் கட்டப்பட தேவன் ஆதரவாளர்களை எழுப்ப, அனுமதி கிடைத்து தடையின்றி கட்டப்பட, குறிப்பாக அவசரமாகக் கட்டப்படவேண்டிய ஆலயங்களுக்காக ஜெபியுங்கள்.

❖ பணித்தளங்களில் இன்னும் நல்ல மழையை தேவன் தரும்படியாக. தொடர்ந்து பயிர்கள் நன்றாக விளையவும், நல்ல அறுவடை கிடைக்கவும் பாரத்துடன் ஜெபியுங்கள்.

❖ பணித்தளத்திற்கு தேவையான Media உபகரணங்கள் வீடியோ கேமரா, Audio Recording equipments (Rs.1.5 Lakhs) உடனடியாக கிடைக்கப்பெறவும், Media Department –ல் பணியாற்ற நல்ல ஊழியர் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

❖ அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் கிடைக்கப்பெறும் ஒவ்வொருவரும் வாசிக்க, ஜெபிக்க, ஊழியங்களைத் தாங்க ஜெபியுங்கள். மேலும் அனுப்பப்படுகிற ஊழிய அறிக்கைகள், நன்றிக் கடிதங்கள், ஜெப விண்ணப்பப் பதில்கள் சரிவர கிடைக்கப் பெறவும் email, SMS, website மூலம் கொடுக்கப்படும் செய்திகள் சரிவர கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள். கடிதப் பரிமாற்றங்கள் எந்தவிதத் தடையுமின்றி நடைபெற ஜெபியுங்கள்.

- **Rt. Rev. Dr. V. Devadass, Sis. Vahitha Devadass** மற்றும் பிள்ளைகள் **Gladson Titus (MBA II Year) Brighton Shalom (B.Tech Media Final Year) Joy Shekinah ( Applying for Medical studies)** இவர்களுக்காக ஜெபியுங்கள்.

- நம் ஊழியத்திற்கு மிக மிக அவசர தேவையான, ரூ. 500/– கொடுத்து ஜெபித்துத் தாங்கக் கூடிய 1000 ஷாலோம் ஊழிய பங்காளர்கள் எழும்பப் பாரத்துடன் ஜெபியுங்கள்.

- செப்டம்பர் மாதம் 24ம் தேதி வெள்ளிக்கிழமை நமது பணித்தளத்திலுள்ள அனைத்து சபைகளிலும் ஷாலோம் அற்புதத்தின் நாள் ஆசரிக்கப்பட உள்ளது. அந்நாளில் தேவன் பல ஆயிரம் அற்புதங்களை சுதேச ஊழியர்கள் மூலம் நடப்பிக்கவும், அநேக ஆயிரம் குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவும் விசேஷமாக ஜெபியுங்கள்.

- அக்டோபர் மாதத்தில் 3,10,17 ஆகிய தினங்களில், நமது பணித்தளங்களில் ஷாலோம் மிஷன் ஞாயிறு கொண்டாடப்பட உள்ளது. இந்த மிஷன் ஞாயிறு எந்தவித பிரச்சனையும், எதிர்ப்பும் இல்லாதபடி நடைபெறவும், விசுவாசிகள் அனைவரும் உற்சாகமாய் காணிக்கைகளைப் படைக்கவும் ஜெபியுங்கள்.

- அக்டோபர் மாதம் 2ம் தேதி தூத்துக்குடியில் நடைபெறவுள்ள பெண்கள் கூடுகைக்காகவும் அக்டோபர் 9&10 ஆகிய இரண்டு தினங்களும் ஆறுமுகநேரியில் நடைபெறவுள்ள நற்செய்தி கூட்டத்திற்காகவும் ஜெபியுங்கள்.

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

நாள்
**11.09.2010, சனிக்கிழமை**

நேரம்
**மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை**

இடம்

**ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு:– **சகோ. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820



# காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் “V. DEVADASS” (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

AXIS BANK

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

ICICI Bank

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

அந்தமானில் மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டது. 17.08.2010 அன்று காலை ஏழு மணியில் இருந்து மூன்று முறை மிக லேசான நில அதிர்வு ஏற்பட்டது. 5.2 ரிக்டர் அளவில் அதிர்வு இருந்தது. எந்த பாதிப்பும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. சுனாமி ஆபத்தும் ஏற்படவில்லை.

மகாராஷ்டிரா மாநிலம் நாசிக்கில் உள்ள ரூபாய் நோட்டுகளை அச்சடிக்கும் கரன்சி அச்சகத்துக்கு மாநகராட்சி ரூ. 240 கோடி அபராதம் விதித்துள்ளது. கடந்த 2006ம் ஆண்டு மார்ச் முதல் 2010ம் ஆண்டு மார்ச் வரை ரூபாய் நோட்டுகளை அச்சடிப்பதற்காக வெளிநாடுகளில் இருந்து ரூ.795.98 கோடி மதிப்புள்ள உயர் தர காகிதங்களை நாசிக் அச்சகம் இறக்குமதி செய்துள்ளது. இதற்கு நுழைவு வரியாக ரூ. 24 கோடி செலுத்தாத காரணத்தினால், 10 மடங்கு அபராத தொகையாக ரூ. 240 கோடி அபராதம் விதிக்கபட்டுள்ளது.

பீகாரில் உள்ள துமாரியா நகரில் உள்ள ஒரு பள்ளியில் கடந்த ஆகஸ்ட் 15ம் தேதி சுதந்திர தினத்தன்று தலைமை ஆசிரியர் தலைமையில் தேசியக் கொடி ஏற்ற மாணவ மாணவியர் சீருடையில் தேச பக்தியுடன் காத்திருந்தனர். ஆனால் அந்த நேரத்தில் மாவோயிஸ்டுகள் பள்ளியில் புகுந்து தேசிய கொடியை எறிந்து விட்டு கருப்புக் கொடியை ஏற்றினர். இதனை கண்டு கொதித்துப் போன ஒரு மாணவி கண்ணிமைக்கும் நேரத்தில் கருப்புக் கொடியை கீழிறக்கி கிழித்தெறிந்து, தரையில் வீசப்படிருந்த தேசியக் கொடியை கயிற்றில் கட்டி சரசரவென கம்பத்தின் உச்சிக்கு ஏற்றினாள். விரைப்புடன் ஒரு சல்யூட் அடித்தாள். பட்டொளி வீசிப் பறந்தது நமது இந்திய தேசிய கொடி. இதை எதிர்பார்க்காத மாவோயிஸ்டுகள் அதிர்ந்தனர். அவர்களை எச்சரிக்கும் விதமாக வானத்தை நோக்கி சரமாரியாக சுட்டபடி சென்றனர்.

நன்றி : http://www.dinakaran.com

**எங்களுடன் தொடர்பு கொள்ள**

<u>தலைமை அலுவலகம்</u>

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

Rt. Rev. Dr. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# கிராம ஆலயம் ஹசல்வாட் மத்தியப்பிரதேசம்



மத்தியப்பிரதேசம் மாநிலத்தில், தார் மாவட்டத்தில் மிகவும் உள்ளடங்கிய பகுதிதான் ஹசல்வாட் கிராமமாகும். மிகவும் மலைப்பாங்கான இந்த கிராமத்திற்கு போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவு. இந்த கிராமத்து வாசிகள் திருடுவதையும் கொள்ளையடிப்பதையும் தொழிலாகக் கொண்டவர்கள். இவர்கள் சாராயம் காய்ச்சிக் குடிப்பதிலும் தேறினவர்கள். இவர்கள் இறந்த ஆவிகளை தெய்வமாகக் கொண்டு வணங்குபவர்கள். இத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்தவர்தான் சகோ. ரமேஷ் மச்சானியா.


சகோ. ரமேஷ் மச்சானியாவின் மனைவி பல வருடங்களாக வியாதிப்பட்டிருந்தார்கள். இவரது வியாதியை தீர்க்க இவர் மந்திரவாதிகளிடமும், மருத்துவமனைகளுக்கும் சென்று பல ஆயிரம் ரூபாய்கள் செலவு செய்துள்ளார்கள், ஆனாலும் இவரது மனைவிக்கு நோய் குணமாகவில்லை. இந்த சூழ்நிலையில் ஜோபட் என்ற பட்டணத்தில், சகோ. கேம்தா சௌகான் என்ற சுதேச ஊழியர் நடத்திவரும் ஜெபக் கூட்டத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு, அங்கு தனது மனைவியை அழைத்துச் சென்றார். ஊழியர் அவரது மனைவிக்கு எண்ணெய் பூசி பாரத்துடன் ஜெபிக்கவே, அந்த நேரத்தில் தேவன் ஊக்கமான ஜெபத்தைக் கேட்டு அவரது மனைவிக்கு பூரண சுகத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் இயேசு கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக, குடும்பமாக ஏற்றுக் கொண்டனர். அதன்பின்பு, சகோ. கேம்தா சௌகான் அவர்களால் தாகோத்தில் (குஜராத்) நடைபெற்ற ஊழியர் கூடுகைக்கு அழைத்து வரப்பட்டார். அந்த கூட்டத்தில் தேவன் அவரை அபிஷேகித்து, ஊழியத்திற்கு அழைத்தார். உடனே தன்னை முழுவதுமாக அர்ப்பணித்து, தனது வீட்டில் ஜெபக்கூட்டம் ஆரம்பித்தார். விசுவாசிகள் அநேகர் கூட்டத்தில் கலந்து கொள்ள ஆரம்பித்தனர், தற்போது இவரது கிராமத்திலும், பக்கத்துக் கிராமங்களிருந்தும் சுமார் 50 குடும்பங்களை தேவனண்டையில் வழி நடத்தி வருகிறார். தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாக தரவே, அந்த இடத்தில் தேவ நாமம் மகிமைப்பட ஒரு அழகிய ஆலயம், சென்னையைச் சார்ந்த Pr. ஜோஸ்வா ஸ்டீபன் ( துதி சுவிஷேச திருச்சபை ) அவர்கள் சபையின் சார்பில் வழங்கப்பட்ட நிதி உதவியினால் கட்டப்பட்டு, 18.04.2010 அன்று அவர்களாலேயே பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**ரூ. 2 இலட்சம் அல்லது ரூ. 1 இலட்சம் அல்லது ரூ. 60 ஆயிரம் நிதி உதவி கொடுத்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# புதுப்பொலிவுடன்.... ஷாலோம் இணையதளம்

## Visit our Shalom *Modish* Website




தமிழ் & ENGLISH

- ஊழியங்களைக் குறித்து முழுமையாக அறிந்து கொள்ள...
- ஜெப தேவைகள் மற்றும் புதிய தகவல்களைப் பெற...
- பணித்தளங்களில் நடைபெறும் ஊழியங்களின் புகைப்படங்களை காண...

**இன்னும் தகவல்கள் ஏராளம் உள்ளன...**

See Today Itself

**www.shalommission.in**

Introduce to Others

**காணுங்கள்.... அறிமுகப்படுத்துங்கள்...**

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss